விலை ரூபா: 15.00

Registered as a JAFFNA in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 27 வியாழக்கிழமை (12.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 236

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெ

## யுத்தத்தால் கொல்லப்பட்டவர்களின் உயிர்களுக்கு கே.பியே பொறுப்பு!

### ஜனநாயக தேசிய முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் இதுவரைக்காலமும் தலைவிரித்தாடிய பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்தை ஒழித்த யுத்தம் என்பவற்றினால் இரு தரப்பிலும் கொல்லப்பட்ட ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட உயிர்களுக்கும் கே.பியே பொறுப்பு கூறவேண்டும் என ஜனநாயக தேசிய முன்னணி குறிப்பிட்டுள்ளது.

ஆயுதம், நிதி மற்றும் சர்வதேச சமூகத்தினரை ஒன்றிணைத்து விடுதலைப் புலிகளைச் சக்திமிக்க அமைப்பாக மாற்றிய பெருமை கே.பியையே (16ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் எதிர்ப்பை தணிக்கவே மேர்வினை பதவி நீக்கும் நாடகம்

### சந்தேகிக்கின்றது ஐக்கிய தேசியக்கட்சி

(கொழும்பு)

பிரதியமைச்சர் பதவியிலிருந்து மேர்வின் சில்வா நீக்கப்பட்டமை அவரின் ஒழுங்கீன நடத்தை தொடர்பான பொதுமக்களின் எதிர்ப்பை தணிப்பதற்கான ஒரு முயற்சி மாத்திரமேயாக இருக்கலாம் என ஐக்கிய தேசிய கட்சி சந்தேகம் தெரிவித்துள்ளது.

அரச ஊழியர் ஒருவரை மரத்தில் கட்டி வைத்ததன் மூலம் சட்டத்தை மீறிய மேர்வின் சில்வாவுக்கு எதிராக மேலும் தாமதமின்றி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென நேற்று (16ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் அரசுக்கு எதிராக செயற்படுகின்றனர்

## யுத்தப்படிப்பினைகள் குழுவின் விசாரணையில் சாட்சியம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு அமைப்புக்கள் தொடர்ந்தும் இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருவதாக சமாதான செயலகத்தின் முன்னாள் தலைவர்கள் பேர்னாட் குணதிலக்க தெரிவித்துள்ளார். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் முதல் அமர்வில் கலந்து கொண்டு சாட்சியமளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)



## மகஸின் சிறையில் மோதல் கைதி ஒருவர் மரணம்

(கொழும்பு)

கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் கைதிகளின் இரு குழுக்களுக்கிடையே நேற்றுக் காலை இடம்பெற்ற மோதலில் கைதியொருவர் பலியானதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் மேஜர் ஜெனரல் வி.ஆர்.டி. சில்வா தெரிவித்தார்.

விளக்கமறியல் கைதியொருவர் மற்றொரு கைதியை கொக்கியொன்றினால் குத்த முற்பட்டபோதே மோதல் மூண்டதாகவும் ஆனால் இரு தரப்பினருக் (16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை யுத்தக் குற்றவிசாரணை நடத்த அமெ. காங்கிரஸ் ஒபாமாவிடம் கோரிக்கை

### ஹிலாரிக்கு கடிதம் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினர்கள் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஆணைக்குழுக்கள் தொடர்பில் நம்பிக்கை கொள்ள முடியாது என குறித்த காங்கிரஸ் சபை உறுப்பினர்கள் அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டனுக்கு கடிதம் ஊடாக அறிவித்துள்ளனர்.

அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் ஆணைக்குழுக்களின் விசாரணை நடவடிக்கைகள் காலம் தாழ்த்தப்படுவதாகவும், தேவையற்ற வகையில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் (16ஆம் பக்கம் பார்க்க)

## இறந்ததாக கூறப்பட்ட யாழ்.இளைஞன் போலந்தில் உயிருடன் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சுமார் 05 வருடங்களுக்கு முன் வெளிநாடு ஒன்றில் இறந்திருக்கலாம் என்று குடும்பத்தினரால் நம்பப்பட்ட ஒரு தமிழ் இளைஞன் போலந்து நாட்டில் உயிரோடு இருக்கின்றார் என்று கடந்த ஓரிரு வாரங்களுக்கு முன் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கோண்டாவிலை சொந்த இடமாகக் கொண்டவர் இ.தயாபரன் (வயது 32) அவர் சுமார் 10 வருடங்களுக்கு முன் பிரித்தானியா செல்கின்றமைக்கென நாட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றிருக் (16ஆம் பக்கம் பார்க்க)

## மேர்வின்சில்வா பயன்படுத்திய அலுவலகத்துக்கு மூடு விழா

(கொழும்பு)

முன்னாள் நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா பயன்படுத்திய அலுவலகம் மூடப்பட்டு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்துக்குள் யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் வட்டாரங்களின் தகவலின்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் மேர்வின் சில்வாவை நேற்று பிரதியமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதன் பின்னர் தர்மபால மாவத்தையில் உள்ள (16ஆம் பக்கம் பார்க்க)



அபான்ஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிட்டட்டின் சேவைகள் யாழ் மக்களுக்கு, சுன்னாகம் கிளையில் இன்று முதல்

அபான்ஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிட்டட் 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்திற்கமைவாக இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் நிதிக் கம்பனியாக பதிவு செய்யப்பட்ட அபான்ஸ் குழுமத்தின் ஓர் அங்கமாகும்.

எமது சேவைகள்

- ★ நிலையான வைப்பு
- ★ சேமிப்பு வைப்பு
- ★ குத்தகை, வாடகைக் கொள்வனவு
- ★ தவணைக் கடன்
- ★ சொத்து வியாபாரம்
- ★ ஏனைய நிதிச் சேவைகள்

Abans FINANCE

தொடர்புகளுக்கு : 160 1/1 & 1/2, கே. கே. எஸ் வீதி, சுன்னாகம். தொ.பே: 021 3207686 தொ.ந: 021 224 1124

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## நல்லூர் மகோற்சவம் - 2010

## வீதித் தடைகள், பாதை மாற்றம் மற்றும் வாகனத் தரிப்பிடங்கள் பற்றிய அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டுக் கீழ்க் குறிப்பிடப்படும் வீதிகள் 12.08.2010 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி தொடக்கம் 10.09.2010 ஆம் திகதி வரை வாகனப் போக்குவரத்துக்காக மூடப்பட்டிருக்கும்.

**01. வீதித் தடைகள்**

- ❖ அரசடி சந்திக்கும் முத்திரைச் சந்தைக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் பகுதி.
- ❖ பிராமணக்கட்டு ஒழுங்கைச் சந்திக்கும் சங்கிலியன் வீதிச் சந்திக்கும் இடைப்படும் கோயில் வீதியின் பகுதி.
- ❖ செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து பருத்தித்துறை வீதி வரையான செட்டித்தெருவின் பகுதி.

**02. பாதைமாற்றம்**

- ❖ பேருந்துகள், சிற்றூர்திகள் மற்றும் சுமை கூடிய வாகனங்கள் ஆனைப் பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச் சந்தியூடாக செல்லுதல்.
- ❖ பருத்தித்துறை வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வீதி வழியாகப் பேருந்துகளும் சிற்றூர்திகளும் செல்வது முற்றாகத் தடை செய்யப்படும்.

**03. வாகனத் தரிப்பிடங்கள்**

- ❖ முத்திரைச்சந்தை பகுதியில் சங்கிலியன் சிலைக்கும் எதிர்ப்பக்கமாகப் பருத்தித்துறை வீதியில்,
- ❖ கந்தர்மடச் சந்திக்கு அப்பால் அரசடி வீதியில்,
- ❖ அம்மன் வீதி-பருத்தித்துறை வீதிச் சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியிலும், வீரமாகாளி அம்மன் ஆலய வீதிகளிலும்,
- ❖ செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பால்,
- ❖ கோயில் வீதியில் சிவன் அம்மன் வீதிச் சந்திக்கு அப்பால்.

திருமதி யோ.பற்குணராஜா
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.

(C-843)

# நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த மகோற்சவம் - 2010

## தற்காலிக கடை வியாபாரிகளுக்கான மாநகரசபையின் அறிவித்தல்

மேற்படி ஆலய மகோற்சவ காலத்தில் அங்கு தற்காலிக கடை வியாபாரத்தில் ஈடுபடுவோர் அதற்குரிய உத்தரவுப் பத்திரத்தை சபையின் பணிமனையில் பெற்று தங்கள் வியாபாரத்தை ஆரம்பிக்க வேண்டும். இவ்வாறு உத்தரவுப் பத்திரம் பெறாது வியாபாரம் செய்பவர்களை வியாபாரம் செய்யும் இடத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் சுகாதார விதிமுறைகளுக்கு அமையாத வியாபாரங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் இதற்குரிய விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி யோ.பற்குணராஜா
மாநகர முதல்வர்
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(C-842)



## மணிவிழா நாயகனை வாழ்த்துகிறோம்

உயர்திரு.
கணபதிப்பிள்ளை ஆனந்தராஜா
(உதவிப் பொது முகாமையாளர், வட வலயம், மக்கள் வங்கி)

நீர்வைக் கிராம மைந்தனும் எமது கல்லூரியின் மாணவனாக விளங்கி உயர் பதவி வகித்தவரும் எம் கல்லூரியில் ஆசிரியப் பணியாற்றிய 'சேதுகாவல உபாத்தியார்' திரு. கணபதிப்பிள்ளை அவர்களின் புதல்வருமான பட்டங்களுக்கும் பதவிகளுக்கும் பெருமை சேர்த்த பண்பாளர் மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளர் உயர்திரு. கணபதிப்பிள்ளை ஆனந்தராஜா அவர்களின் சேவையை நயந்து இறையருளோடு நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி.

(2144)

## உங்களது சேமிப்புகளை பாதுகாக்க நாங்கள் யாழ்.மண்ணில்...

இன்று சுன்னாகம் கிளை ஆரம்பம்

# அபான்ஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிட்டட்

# Abans Financial Services Ltd

160 1/1, 1/2, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

அபான்ஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிட்டட் 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்திற்கமைவாக இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் நிதிக் கம்பனியாக பதிவுசெய்யப்பட்ட அபான்ஸ் குழுமத்தின் ஓர் அங்கமாகும்.



இன்றிலிருந்து யாழ்.குடா மக்களின் முன்னேற்றத்திற்கு ஒரு விடிவெள்ளி பிறக்கின்றது. அபான்ஸ் பினான்ஸ் தனது முதலாவது வட மாகாணத்திற்கான கிளையை யாழ்.குடாமக்களுக்கு சேவை வழங்குவதற்காக இன்று 11 மணியளவில் சுன்னாகத்தில் ஆரம்பிக்கின்றது.

**எமது சேவைகள்**

- ★ நிலையான வைப்பு
- ★ சேமிப்பு வைப்பு
- ★ வாடகைக் கொள்வனவு
- ★ லீசிங்
- ★ சொத்து வியாபாரம்
- ★ தவணைக் கடன்
- ★ குறுந்தவணைக் கடன்
- ★ ஏனைய நிதிச் சேவைகள்

**கிளைகள்:**

| | |
|---|---|
| அனுராதபுரம் | 0253856947 |
| இரத்தினபுரி | 0453457777 |
| பதுளை | 0553557730 |
| குருநாகல் | 0373877888 |
| தம்புல்லை | 0663669876 |
| கண்டி | 0813842720 |
| காலி | 0913907720 |
| கம்பகா | 0333438602 |
| சுன்னாகம் | 0213207686 |

**Abans Financial Services Ltd**
(A Member of Abans Group)
Head Office: 400, Gale Road, Colombo - 03.
Tel: 0112375531-3, Fax:0112375517.

Abans FINANCE

(C-846)

JAFFNA

# இன்று ஒரு தகவல்

## சகுனமும் சங்கடமும்

ஒரு கடைக்குப் போய் பத்து ருபாயைக் கொடுத்து ஒரு தினசரி பத்திரிகையைக் கேட்டேன். அவர் உடனே அங்கே அடுக்கி வைத்திருந்த பத்திரிகையில் ஒன்றை எடுத்து என்னுடைய கையில் கொடுத்தார் . பின் மீதிப் பணத்தை எதிரிலிருந்த பலகையில் வைத்து எடுத்துக் கொள்ளச் சொன்னார் எப்பொழுதும் அப்படித்தான் செய்வார் நானும் எடுத்துக் கொண்டு வந்து விடுவேன் . இவர் ஏன் இப்படிச் செய்கிறார் என்று எனக்கு ரொம்ப நாளாக ஒரு சந்தேகம் அதை அவரிடமே கேட்டேன். "உங்களுடைய கடையில் பொருட்கள் வாங்குபவர்களுக்கு மீதியைக் கொடுக்கும் போது பலகையில் வைத்து விடுகிறீர்களே.... ஏன் கையில் கொடுப்பதில்லை?'' என்று கேட்டேன் "காசைக் கையில் கொடுத்தால் நம்மிடமுள்ள 'இலட்சுமி' போயிடுவா சேர்'' என்றார். அதாவது ப ணம் செலவாகிவிடும் என்று அர்த்தமாம் இன்னொரு நண்பர் ஒருநாள் சோகமாக உட்கார்ந்திருந்தார் ''என்ன ஆச்சு? ஏன் இப்படிக் கப்பல் கவிழ்ந்தது போல் உட்கார்ந்திருக்கிறீர்கள்'' என்று கேட்டேன் ''கப்பல் கவிழ்திருந்தால் கூட கவலைப்பட்டிருக்கமாட்டேன் சேர் வேறொன்று நடந்து போய் விட்டது'' என்றார். "என்ன?'' என்று கேட்டேன் "என் உச்சந் தலையில் பல்லி ஒன்று விழுந்து விட்டது சேர்'' என்றார். "அதற்காகவா இப்படி?'' என்று ஆச்சரியப்பட்டேன். "ஆமாம், பல்லி உச்சந்தலையில் விழுந்தால் பலன் என்ன என்று பஞ்சாங்கத்தில் பார்த்தேன் மரணம் என்று போட்டிருக்கிறது'' என்று சொல்லிவிட்டு அவர் தொடர்ந்து கவலைப்பட ஆரம்பித்தார். என்னுடன் வேலை பார்க்கும் ஒருத்தர் இருந்தார் . அவர் தினமும் வலது காலை வைத்துத்தான் அலுவலகத்திற்குள் நுழைவார். என்றைக்காவது தவறுதலாக இடது காலை வைத்து உள்ளே வந்து விட்டார் என்றால் அன்று முழுவதும் மனச்சங்கடப்பட்டுக் கொண்டேயிருப்பார். எந்த வேலையும் சரியாக ஓடாது பூனை குறுக்கே.போனாலும் சகுனம் சரியில்லை என்று நினைப்பவர்களுண்டு. ஆனால் ஒருத்தர் எப்படித் தெரியுமா? அவர் வெளியில் கிளம்பும் போது பக்கத்து வீட்டு ரேடியோவில் "மியாவ் மியாவ் பூனைக் குட்டி'' என்று பாட்டுச்சத்தம் கேட்டால் கூட போதும். சகுனம் சரியில்லை என்று பிரயாணத்தை மேற்கொள்ளமாட்டார்.

இவ்வளவும் எதற்குச் சொல்கிறேன் என்றால்... அளவுக்கு மீறிய சகுன நம்பிக்கைகள் இருக்கிறதல்லவா அதனுடன் பயமும் சேர்ந்து விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

இது ஒருவருடைய மனநிலையைப் பாதித்துவிடும் என்பது மனோதத்துவ நிபுணர்களின் கருத்து.

வாழ்க்கையையே தடுமாற வைத்துவிடும். பாதுகாப்பில்லாத உணர்வு , ஒரு வித மனத்தளர்ச்சி இவையெல்லாம் இதற்குக் காரணமாக அமையலாம்.

அறிவு தான் மனதுக்கு வாத்தியாராக இருக்க வேண்டும். அப்பொழுது தான் வாழ்க்கை நிம்மதியாக இருக்கும்.

அறிவு மனம் சொல்லும் படியெல்லாம் கேட்க ஆரம்பித்து விட்டால் இடைஞ்சல் தான்.

ஒருத்தருக்கு 7 ஆம் நம்பர் தான் ராசியான நம்பராம். ஏழாம் திகதி தான் எந்தக் காரியத்தையும் ஆரம்பிப்பார். 7 எழுத்து வருவது போல் பெயரை மாற்றிக் கொண்டார்.

தினமும் 7 மணிக்குத்தான் எழும்புவார். 7 ஆம் நம்பர் வீட்டில் தான் குடியிருக்கிறார். திருமணமும் 7 ஆம் திகதி தான் செய்து கொண்டார். அவர் ஒருநாள் குதிரைப் பந்தயத்துக்குப் போனார்.

குதிரையின் பெயரையெல்லாம் பார்த்தார். ஒரு குதிரையின் பெயர் 7 எழுத்தில் அமைந்திருந்தது. உடனே அதன் மீது பணத்தைக் கட்டினார்.

பந்தயம் நடந்தது...''என்ன ஆச்சு சேர்?'' என்று கேட்டார்கள்.

"நான் பணம் கட்டிய குதிரை ஏழாவதாகத்தான் வந்து சேர்ந்தது'' என்றார் சோகமாக.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்தில் விரைவில் வெற்றிடமாகவுள்ள யா/தொண்டைமானாறு வீ.ம.வி, யா/கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலைகளது அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை யைச் சேர்ந்தவர்களும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I, வகுப்பு 2-I ஐச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும் எனவும் விண்ணப்பதாரி பட்டதாரிகளாக அல்லது அதற்கு மேற்பட்ட தகைமைகளைக் கொண்டவர்களாக இருப்பதுடன் ஆகக் குறைந்தது மூன்று வருடங்களேனும் சேவையாற்றக் கூடிய வய தெல்லையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் என வடம ராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த பொருத்தமானவர்களது விண்ணப்பங்கள் கிடைக்காத பட்சத்திலேயே ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படும் எனவும் விண்ணப்பிக்க விரும்புவோர் வலயக் கல்வி அலுவலக நிர்வாகப் பிரிவில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கு மாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலை யத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர் தரம்) இரசாயனவியல் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அமைந் துள்ள ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெற உள்ளதால் சகல இரசாயனவியல் கற்பிக்கும் ஆசிரியர்களை இச் செயலமர்வில் பங்குபற்றுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (6)

## வடக்கு,கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் புதிய வரைபடம்

(கொழும்பு)

வடக்கு,கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் புதிய வரைபடமொன்று உருவாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒன்றுக்கு பத்தாயிரம் என்ற அளவுத் திட்டத்தின் அடிப்படையில் இந்த வரைபடம் வரையப்படவுள்ளது.

புதிய வரைபடத்தை உருவாக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என இலங்கை அளவைத் திணைக்களத்தின் ஆணையாளர் எஸ்.எம். டபிள்யூ பெரேரா தெரிவித்துள்ளார்.

தனியார்கள் காணிகள் , அரசாங்கக் காணிகள் , சுற்றுலா வலயங்கள் மற்றும் பயிர்ச் செய்கை நிலங்கள் போன்றவை இந்த வரைபடத்தில் உள்ளடக்கப்படவுள்ளது.

எதிர்வரும் நாட்களில் மேற்கொள்ளப்பட உள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு இந்த வரைபடங்களின் மூலம் பயனடைய முடியும் எனக் குறிப்பிடப்படுகிறது. (6-2)

## இராசி பலன்

*12.08.2010*
*(ஆடி 27, வியாழக்கிழமை)*
*திருதியை பின்னிரவு 1.57 மணிவரை*
*பூரம் பிற்பகல் 5.39 மணிவரை*
*இராகுகாலம் 1.34-3.04 மணிவரை*
*சுபநேரம் 7.34-9.04 மணிவரை*
*தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கொடியேற்றம், ஆடிப்பூரம்.*

**மேடம்** அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், இனிமையான நாள், இல்லம் தோடி நல்ல செய்திகள் வந்து சேரும், பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயற்படுவர்.

**இடபம்** தாய்வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், கந்தன் வழிபாடு காரிய வெற்றி தரும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், பிரயாணத்தின் மூலம் நன்மையுண்டாகும், கபடமாகப் பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**கடகம்** உங்கள் சிறந்த ஆலோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்தி வந்து சேரும்.

**சிங்கம்** திட்டமிட்ட காரியங்களில் திடீர் மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை உருவாகும், தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பச் சுமை கூடும், இறைவழிபாட்டால் இனிமைகாண வேண்டிய நாள்.

**கன்னி** அலைச்சல் அதிகரிக்கும், தொழிலில் பணியாளர்களை மாற்றும் சிந்தனை உருவாகும் உயரதிகாரிகள் அனுசரணையாக இருப்பர்.

**துலாம்** எதிர்பாராத விதத்தில் ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவர், கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்** தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும், வங்கிச் சேமிப்புக்கள் உயர்வடையும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், நண்பர்கள் தாமாகவே முன்வந்து உதவுவர்.

**தனுசு** ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், சிலர் உதவி கேட்டு வரலாம், தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியங்களில் வெற்றி பெறலாம், தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** எதிர்பாராத வகையில் சில முரண்பாடுகள் ஏற்படலாம், பிரயாண பயம் உண்டு, செலவுகளுக்கு பணத்தட்டுப்பாடு ஏற்படலாம், மகிழ்ச்சி ஏற்பட மயில் வாகனனை வழிபட வேண்டிய நாள்.

**கும்பம்** உங்கள் திறமையால் மகத்தான காரியம் ஒன்றை செய்து முடிப்பீர்கள், குடும்பத்தினர் மூலம் சில வரவுகள் வந்து சேரலாம், தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** தேகாரோக்கியம் சீராக இருக்கும், காணாமல் போன பொருள் ஒன்று கைக்கு கிடைக்கலாம், உறவினரின் வருகையுண்டு, உத்தியோக மாற்றம் பற்றிய சிந்தனை.

வளவன்


## பேசும் படம்




காட்சி-கந்தரோடை

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 100 |
| தக்காளி | 60 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 80 | 80 | 70 |
| கரட் | 120 | 120 | 120 |
| பூசணி | 40 | 50 | 50 |
| புடோல் | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 | 60 |
| பயற்றங்காய் | 120 | 120 | 150 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 70 | 60 |
| கறிமிளகாய் | 80 | 100 | 70 |
| முருங்கைக்காய் | 60 | 140 | 100 |
| போஞ்சி | 120 | 100 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 20-25 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 25 |



யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய இரதோற்சவ பெருவிழா நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

## ஆடிப்பூரப் பெருவிழா

வடமராட்சி வியாபாரி மூலை பழவத்தை ஸ்ரீகாளி அம்பாள் திருக்கோவில் விகிர்தி வருட வருடாந்த ஆடிப்பூர உற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 7மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சிறப்பு நிகழ்ச்சியாக மதியம் 12 மணிக்கு ''அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்'' எனும் தலைப்பில் காரை.எம்.பி. அருளானந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (4)

✠✠✠

(இருபாலை)

கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் ஆடிப்பூரத்திருவிழா இன்று காலை 9 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி பகல் 11 மணிக்கு அம்பாள் வெளிவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (6-4-136)

## மத்திய சபையின் விசாரணைகள் வேறு இடத்திற்கு மாற்றம்

(அல்வாய்)

பருத்தித்துறை மத்தியஸ்தர் சபையின் விசாரணைகள் யாவும் யாழ். வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்று வந்தது.

தற்போது இப் பாடசாலையானது க.பொ.த உயர்தரப் பரீட்சை இணைப்பு நிலையமாகவும் பரீட்சை மண்டபமாகவும் இருப்பதால் விசாரணைகள் யாவும் தற்காலிகமாக, பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக பருத்தித்துறை மத்தியஸ்தர் சபைத் தவிசாளர் ஆ.வடிவேலு அறிவித்துள்ளார்.

அடுத்து நடைபெறவுள்ள விசாரணைகள் அனைத்தும் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (6-2-19)




## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில், யாழ்.மாவட்டத்தில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெற்று வருகிறது.

இதில் இன்றைய போட்டியில் பிற்பகல் 3மணிக்கு வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளன.

பிற்பகல் 4மணிக்கு நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளன.

இதேவேளை இறுதிப் போட்டியில் சம்பியனாகும் அணிக்கு 20ஆயிரம் ரூபா பணப் பரிசும் வெற்றிக் கேடயமும் வழங்கப்படவுள்ளதுடன் காலிறுதிப் போட்டிகள் மின்னொளியில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4-24)

# கசூரினா கடற்கரைப் பகுதியில் கலாசார சீரழிவுகள் தொடர்கின்றன

## மக்கள் ஆதங்கம்

(காரைநகர்)

காரைநகர் கசூரினாக் கடற்கரையில் உல்லாசப் பயணிகளாக வரும் இளைஞர்கள், யுவதிகள் கலாசார சீரழிவுகளில் ஈடுபடுவதாகவும், ஏனைய உல்லாசப் பயணிகள் பாதிக்கப்படும் வகையில் நடந்து கொள்வதாகவும் தெரியவருகிறது.

தற்போது யாழ்.குடாநாட்டில் வெப்பம் அதிகரித்துள்ளதாலும், பாடசாலை இரண்டாம் தவணை விடுமுறைக்காலமாக இருப்பதாலும் இக் கடற்கரைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் தொகை அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், யாழ்.குடாநாட்டு உல்லாசப்பயணிகள்,தென்னிலங்கை மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் என பலதரப்பட்ட ஆயிரக்கணக்கானவர்கள் இக்கடற்கரையில் குவியும் இக்காலத்தில், சில இளைஞர், யுவதிகள் கலாசார சீரழிவுகளில் ஈடுபட்டு வருவதாக ஏனைய உல்லாசப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் பலரதும் முன்னிலையில் மது அருந்துவதுடன், வெற்றுப் போத்தல்களை உடைத்து மக்கள் நடமாடும் இடங்களிலும் கடற்கரையிலும் வீசிவருவதுடன், ஏனைய உல்லாசப் பயணிகளை தகாத வார்த்தைகளால் பேசுகின்றனர்.

இதனால் குடும்பமாக தமது விடுதலைக் காலத்தை கழிக்க வரும் உல்லாசப் பயணிகள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து எதிர்கால சந்ததியினரின் வாழ்வு சீரழியாமல் இருக்கவும், உல்லாசப் பயணிகளுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் நடந்துகொள்வதற்கு ஆவன செய்யுமாறு மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (6-2-246)

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் விளையாட்டுவிழா முதன்முறையாக யாழில்

(கொழும்புத்துறை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற விளையாட்டு விழா முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ளது.

இவ் விளையாட்டுப் போட்டிகள் யாவும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 1,2,3 ஆம் திகதிகளில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது. (6-2-51)

## பெண்களுக்கான தேசிய ஆலோசனை குழுவின் அங்கத்தவர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் உயர்மட்டக் குழுவான, பெண்களுக்கான தேசிய ஆலோசனைக் குழுவின் அங்கத்தவராக யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சறோஜா சிவச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நியமனம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்பட்டுள்ளதோடு, வடக்கின் முதன்முறையாக ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்குழுவில் அங்கத்துவம் வகிப்பதன் மூலம் பெண்களுக்கான பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அது தொடர்பான பிரச்சினையை அமைச்சு மட்டத்தில் எடுத்துக் கூறும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (6)

## செயற்குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழரசுக் கட்சி கோப்பாய் தொகுதிக் கிளையின் செயற்குழுக்கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு ஆவரங்கால் கோப்பாய் கிளை அலுவலகத்தில் தலைவர் சி.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அமரர் கோப்பாய் கோமகன் கு.வன்னியசிங்கம் நினைவு தினமும், நூற்றாண்டு விழாவும் கொண்டாடுவது தொடர்பாகவும் இவரின் பெயரில் சமூக மறுமலர்ச்சி மன்றம் உருவாக்குவது பற்றியும் ஆராயப்படவுள்ளது.

எனவே, மாவட்டக் கிளைத் தலைவர், செயலாளர்கள் வருகை தரவுள்ளதால், குறித்த நேரத்திற்கு கூட்டம் ஆரம்பமாகுமென கிளைச் செயலாளர் அ.பரஞ்சோதி அறிவித்துள்ளார். (6-2)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தீவிரமாக நடைபெற்று வருகிறது. குறிப்பாக தும்பளை கிழக்குப் பகுதியிலுள்ள பொது அமைப்புகளும் கிராம அலுவலரும் இணைந்து இப்பகுதியில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன.

மேலும் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காதோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பருத்தித்துறைப் பிரதேச சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (6-10)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு சமுத்திரத் தீர்த்தமும் இடம்பெறவுள்ளது. (6-4)

✠✠✠

(இருபாலை)

குப்பிழான் கற்கரை கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி மாலை சப்பறமும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை இரதோற்சவமும் மறுநாள் காலை தீர்த்தத்திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (6-4-136)

## தேர்தல் கடமைகளில் ஈடுபட்டோருக்கான கொடுப்பனவு

(அல்வாய்)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தல் கடமையில் ஈடுபட்ட வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த அனைவருக்குமான கொடுப்பனவுகள் கிடைக்கப் பெற்றுள்ளது.

மேற்படி உத்தியோகத்தர்களின் பணம் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக வடமராட்சி கல்வி வலய கணக்காளர் ஆ.கிரிதரன் அறிவித்துள்ளார். (6-2-19)

## நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சங்கத்தானை ஈழவாரியம் பதியுறை ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய வரலாற்று நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய முன்றலில் ஆலய பரிபாலனசபைத் தலைவர் வா. முத்துக்கிருஸ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை விளைவேலி புன்னாலைக்கட்டுவன் ஆலய பிரதமகுரு து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள், ஆலய முன்னாள் பிரதமகுரு சிவ ஸ்ரீ குமார ஸ்ரீகாந்த குருக்கள், கிராம உத்தியோகத்தர் சி.க. வேலயாயுதம்பிள்ளை, இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் செல்வி சந்திரராஜினி கணபதிப்பிள்ளை ஆகியோர் வழங்கவுள்ளனர்.

மேலும் நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக பிரதி பிரதம ஒழுக்காற்று அதிகாரியும் ஆலய முன்னாள் பரிபாலன சபைத்தலைவர் லயன் ஐ.கோ.சந்திரசேகரம் வழங்கவுள்ளனர். (6-4)

# ஐந்து வருடங்களில் நாடளாவிய ரீதியில் 10 இலட்சம் வீடுகள் நிர்மாணிக்கும் திட்டம்

## வீடமைப்பு அமைச்சர் தகவல்

வடக்கு கிழக்கு மலையகம் உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் எதிர்வரும் ஐந்து வருடங்களில் 10 இலட்சம் வீடுகளை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்தவருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்துடன் இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும். அரச ஊழியர்கள், தனியார் துறையினர், ஊடகவியலாளர்கள்என வீடுகள் அற்ற அனைவருக்கும் வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படும் என்று வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் வீமல் வீரசன்ச தெரிவித்தார்.

வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து கூறுகையில்; தற்போதைய நிலைமையில் நாட்டில் 12 இலட்சம் வீடுகள் தேவைப்படுகின்றன. அந்த வகையில் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சுக்கு பாரிய பொறுப்பு காணப்படுகின்றது.

அதன்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் நாடளாவிய ரீதியில் எதிர்வரும் ஐந்து வருடங்களில் 10 இலட்சம் வீடுகளை அமைப்பதற்கு வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். 2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் ஊடாகவே இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம். அரச ஊழியர்களுக்கு வீடுகளை நியாயமான விலையில் பெற்றுக்கொடுக்க விசேட வேலைத் திட்டங்களை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் தனியார்துறை ஊழியர்களுக்கும் நியாயமான விலையில் இவ்வாறு வீடுகள் அமைத்துக் கொடுக்கப் படும். வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களுக்காகவும் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

இதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தேசிய வீடமைப்பு அதிகார சபை மேற்கொண்டு வருகின்றது. முக்கியமாக கொழும்பு மாவட்டத்தில் 65 வீடுகள் அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதாவது சேரிப்புறங்களில் வசிக்கின்ற மக்களுக்கே இவ்வாறு மாடி வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன. மாறாக சேரிப்புறங்கள் வர்த்தக நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படவுள்ளன. (6-2)

# நுளம்புகள் பெருகுமிடங்களை அகற்றாத 14 பாடசாலைகளுக்கு எச்சரிக்கை அறிவுறுத்தல்

(கொழும்பு)

நுளம்புகள் பெருகுமிடங்களை அகற்றாத மற்றும் சுத்தப்படுத்தாத சம்பவம் தொடர்பில் 14 பாடசாலைகளுக்கெதிராக எச்சரிக்கை அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக கொழும்பு மாநகர சபை அறிவித்துள்ளது. இதில் இரண்டு புகழ் பெற்ற பாடசாலைகள் அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று தினங்களுக்குள் நுளம்புகள் பெருகும் இடங்களை அகற்றாவிடின் அவ்வாறான பாடசாலை அதிபர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கொழும்பு மாநகர சபையின் பிரதான வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் 800 பாடசாலை மாணவர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கொழும்பின் பிரதான பாடாசலை ஒன்றின் ஆசிரியர் ஒருவரும் டெங்கு நோயினால் மரணமடைந்துள்ளார்.

அத்துடன் அந்த பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது நுளம்புகள் பெருகுவதற்கான பல இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக அந்த வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் இதுவரை ஆயிரத்து 450 பேரும் நாடு முழுவதிலும் 23 ஆயிரம் பேரும் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதற்கான நடவடிக்கைகளில் பாதுகாப்புப் பிரிவினர் ஈடுபடுத்தப்பட்டதன் பின்னர் நோயின் தாக்கம் ஒரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் இந்நடவடிக்கைகளில் பொது மக்களின் ஒத்துழைப்பும் மிகவும் அவசியம் எனவும் அவர் கூறியுள்ளார். (6)

# இந்தியா அமைக்கும் வீடுகள் பற்றிய அறிக்கை கையளிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

வட பகுதியில் மீளக் குடியமர்த்தப்படும் மக்களுக்கு இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்படவுள்ள வீடுகள் தொடர்பான முழுமையான அறிக்கை இந்தியாவிடம் கையளிக்கப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடமாகாண அபிவிருத்தி மற்றும் மீள் குடியேற்றத்திற்கான செயலணி இந்த அறிக்கையை இந்திய அரசிடம் கையளிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி,முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள பிரதேசச் செயலகப் பிரிவுகளில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 150 வீடுகளும் வவுனியா வடக்கில் 175 வீடுகளும்,மன்னாரில் 175 வீடுகளும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தலா 250 வீடுகளும் முதல் கட்டமாக நிர்மாணிக்கப்படவுள்ளன.

மாதிரி வீடமைப்புத் திட்டத்திற்கான இடங்கள் மற்றும் வீடுகள் வழங்கப்பட வேண்டிய மக்களின் விபரங்கள் தொடர்பில் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் கூறினார்.

இந்திய அரசாங்கம் இலங்கையின் வடபகுதிமக்களுக்கு 51 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு இணங்கியுள்ளது.

இதன் முதல் கட்டமாக ஆயிரம் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

இதேவேளை இதன் அடுத்த கட்டமாக 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான மதிப்பீட்டு அறிக்கைகளை தயாரிக்கும் பணிகளை ஜனாதிபதி செயலணி ஆரம்பித்துள்ளதாகவும் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி குறிப்பிட்டுள்ளார். (6-2)

# விமானநிலையத்தில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலகம்

வெளிநாடுகளுக்குப் பணிப்பெண்ணாகச் செல்லும் பெண்கள் தமது பிள்ளைகள் குறித்த விபரங்களைப் பதிவு செய்வதற்கான அலுவலகமொன்றை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அமைப்பதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை உத்தேசித்துள்ளது.

தாய்மார்கள் தொழில்நிமிர்த்தம் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது அவர்களின் பிள்ளைகள் குடும்ப அங்கத்தவர்களால் புறக்கணிக்கப்படும் நிகழ்வுகள் அதிகமாகவுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல தாய்மார்கள் வெளிநாடுகளிலிருக்கும் போது பிள்ளைகளுடனான தொடர்பை இழந்துவிடுவதாகவும் இதனால் பிள்ளைகளின் வாழ்க்கையில் பாதிப்பு ஏற்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனால் வெளிநாடுகளுக்கு தொழில்புரியச் செல்லும் பெண்கள் தமது பிள்ளைகள் பற்றிய விபரங்களை விமான நிலையத்தில் வைத்து பதிவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அப்பிள்ளைகள் யாருடன் தங்கியிருக்கிறார்கள் என்பன போன்ற விபரங்கள் பதிவு செய்யப்பட்டு அப்பிள்ளைகளின் வாழ்க்கை கண்காணிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (6-2)



# உயர்தனிச் செம்மொழி

02



இதனை நமது கனம் பொருந்திய ராஜப் பிரதிநிதியவர்களும் சர்வகலா சாலை யின் அவயவிகளும் உள்ளவாறே கவனித்து நடப்பார்களாக. இவர்கள் தமக்கு என்றுங் குன்றாப் பழியை விளைக்கத் தக்க செயலிற் புகாது புகழ் பயக்கற்பால நல்லாற்றிற் சென்று நம் தமிழ் மொழியும் உயர் தனிச் செம் மொழியென்றே கொண்டு ஒழுகுவார் களாக. ஆலவாயிற் பெருமானடிக ளாகிய இறையனார் திருவருள் பெற்ற நம் தமிழ் மக்கள் என்றுந் தலைகவிழாது ஒளிர்க.

**தமிழ்ப் பாடசாலைகள்**

கிராமந்தோறும் தமிழ்ப் பாடசாலைகள் தொன்று தொட்டு நடந்து வருகின்றன. கிராமச் சிறார்கள் இவற்றிற் கல்வி கற்று வருகின்றனர். இவற்றின் சரித்திரத்தை ஆராயுங்கால் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இப் பாடசாலைகளில் தமிழ் நன்கு பயிற்றுவிக்கப்பட்டதென்பதும், தற்காலத்தில் அத்துணை பயிற்றுவிக்கப்படவில்லை யென்பதும் எவரும் அறிந்த விஷயமே. இதன் காரணம் யாது?

தற்காலத்துத் தமிழ்ப் பாடசாலைகளில் வாத்திமைத் தொழில் நடத்துவோர் பெரும் பான்மையும் தமிழறிவு நுட்பங்கள் காணா தவரே. ஆங்கிலப் பாடசாலைகளிற் சில் லாண்டு கற்று ஆங்கிலேயமாயினும் தமிழா யினும் சீர்பெறக் கல்லாமல் உதரவலி ஒழித்தற் பொருட்டுத் திரிபவரே சிறுவர்களுக் குப் போதிக்க வருபவராவர். இவர்கட்கு இலக்கண இலக்கிய அறிவு சூனியம். "சட்டியிலுண்டானாலன்றோ அகப்பையில் வரும்" பண்டமில்லாத வாசிரியரிடங் கற்கும் மாணவர் எங்ஙனம் பயன்பெறுவர்? அன் றியும் ஆங்கிலம் அரச மொழி யானதனால் முதன்மை பெற்று, நம் நாட்டு ஆலமரம்

## செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

போல தழைத்து விழுது விட்டு வலிமையுற்று விளங்கிவரும் இக்காலத்தில் சிறார் தமிழ்ப் பாடசாலைகளில் தங்கும் காலம் சிறிதேயாம்.

அன்னார் ஐந்து வயதாகும் முன்னர் ஆங்கிலம் கற்கத் தொடங்குகின்றனர். தமிழ்வாசமும் ஏற்காமல் ஆங்கிலக் கல்வி தொடங்கும் மாணவர் உடல் தேய்ந்து, கண் பூத்து, மனமிற்று நாளடைவில் யமனுக் குணவாகின்றனர். உலகறிவும் ஆயுள் விருத்தியும் குன்றிய இவர்களுடைய சந்த தியின் நிலையை நினைப்பிற் பரிதாபமே. மேலும் தமிழ் பயிற்றும் முறையைக் கவனிக்கப் புகின் வியப்பே. இலகுவாய்ப் பிள்ளைகளுக்கு மொழியைக் கற்றுக் கொடுக்கக் கருதித் துரைத்தனத்தார் செய்தி ருக்கும் ஏற்பாடுகள் தமிழ் மொழிக்கு ஒவ்வா தனவே .முன்னிருந்த தமிழ்ப் பாடசாலை உபாத்தியாயருக்கு ஆங்கிலக் கல்வி கிடை யாதாயினும் தமிழ் இலக்கண இலக்கியத் தேர்ச்சி மிகுதியுமுண்டு. பிள்ளைகளும் குறைந்தது பன்னிரண்டு வயதுவரை தமிழ் கற்றுவந்தார்கள்.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, உலகநீதி, வெற்றிவேட்கை, குறள், நாவலடி, குறவஞ்சி, திவாகரம், நிகண்டு, எண்சுவடி, குழிப்பெருக்கம், தானப்பெருக்கம் இவை போன்ற நூல்களைப் பயின்று வந்தனர். எண்ணெழுத்திகழாத இம் மாணவர் பாக் களை வாசித்து அன்வயப்படுத்தி அருத் தஞ் சொல்லவும் கொடுத்த கணக்கை வாயாற் றீரவும் சக்தியுள்ளவராய், உலகில் (லௌகீக) அறிவுபடைத்தவராய், ஒழுக்கம் விழுமிதாக் கொண்டவராய் நன்கு மதிக்கப்பட்டு வந்த னர். ஞாபகசக்தி தற்காலத்து வாலிபர்களுக்கு பெரும்பான்மையும் கிடையாது. நான்கு பாட்டுச் சொல்ல ஏலாது, சிலேட்டிலாயினும் காகிதத்திலாயினும் எழுதிப்பாராமல் கணக்கு ஓடாது. இஃதன்றியும் கற்கும் காலவிளவும் சிறிதன்று. தமிழ்ப்பாடசாலை விட்டபின் குறைந்தபட்சம் 18ஆண்டு செல்லும் பி.ஏ. பட்டம் பெற.

11 வயதில் ஆங்கிலம் கற்கப் புகுந்த மாண வரும் மேற்கூறிய காலவளவிற்கு முன்னரே அஃதாவது இருபது வயதில் பட்டம் பெற்று வந்தனர். இரு திறத்தாருக்கும் வித்தியாசம் என்னவெனில்... பின்னவர் நீண்ட ஆயு ளும், அறிவு முதிர்ச்சியும், ஒழுக்கச்செல்வ மும், உடற்திறமும் பெற்றிருந்தனர். முன்ன வரோ, ஈபோல் நைந்தும், கண்ணொளியி ழந்தும், இழைத்தநாள் எல்லையடையாத தும், உடலாக்கம், மனவாக்கம் பெறாதும் கைப்பொருள் இழந்தும் வருவாய் குன்றியும் தம்மைப்பெற்ற தவிக்கவும், தாம் பெற்ற குழவிகள் துடிக்கவும் விட்டொழிகின்றனர். அந்தோ பாவம்! இப்பரிதாப நிலை தவிர்த்தல் எங்ஙனம்? துரைத்தனத்தாரும் தமிழபி மானிகளும் தமிழ்ப்பாடசாலைகளை நன்கு பாராட்டுதலினாற் கூடும். இன்ஸ்பெக்டராக ஏற்பட்டிருக்கும் தமிழர்கள் தக்கதமிழ் பாடங் களை ஏற்படுத்தவேண்டும். தமிழ் கற்பிக்கும் முறை வேறு, மற்ற மொழிகள் கற்பிக்கும் முறைவேறு என்பதை வற்புறுத்தி தமிழின் விசேசங்களை எடுத்துக்காட்டி ஆங்கிலப் போதனா முறை இதற்கு உதவாது என்பதை விளக்கவேண்டும். ஆங்கிலத் தேர்ச்சி மட்டு மின்றி ; தமிழிலும் தக்க தேர்ச்சி உடை யவரை தெரிந்து ஆசிரியராக்க வேண் டும். அன்னார்க்கு மட்டும் போதனா முறை பயிற் றுவித்து போதகரா அனுப்பவேண்டும். சர்க்கார் உதவி பொருளையும் பாத்திரமறிந்து படைக்கவேண்டும். இத்தகைய குறிப்புகளை

### பரிதமாற் கலைஞர்

கலப்பரேல், எல்லாத் தீமைத் தொழில் முன் போல் பறக்கும். மாணவர் மிக்க பயன் பெறுவர், வாழ்நாள் வீணாகாமல் இம்மை யிற்றழைத்து, மறுமைக்கும் வித்திடுவர் தமிழபிமானிகள்! தமிழபிவிருத்திக்கு ஆணி வேர் தமிழ்ப் பாடசாலைகள் ஆதலினால் அவற்றை கண்திறந்து பாருமின் . அவற் றிற்கு பைதிறந்துதவுமின் வாக்குச் சகாயம் செய்யுமின், எவ்வாற்றானும் சிறார்கள் தமிழ்தாயை போற்றவல்ல வழிகளை நாடிக் கொடுமின். (முற்றும்)




உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வல்வெட்டித்துறை நகரசபையால் பாடசாலைகள் மற்றும் விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வல்வை ஒன்றியச் செயலாளர் இ.அகமணிதேவர் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் உள்ளூராட்சி சபையின் சமூகசேவை உத்தியோகத்தர் விளையாட்டு நிகழ்வில் வெற்றிபெற்ற வீரருக்கு பரிசில் வழங்குவதையும் கலைநிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- வல்வெட்டித்துறை செய்தியாளர்)

# உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

(கொழும்பு)

சமாதான செயலகத்தின் முன்னாள் தலைவர் பெர்னாட் குணதிலக்கவிடம் உண் மையைக் கண்டறியும் ஆணைக்குழு சாட்சி யங்களைத் திரட்ட உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது அரசாங் கக் குழுவில் பெர்னாட் குணதிலக்கவும் அங்கம் வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் சாட்சியமளிக்க உள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் உள்ள லக்ஷ்மன் கதிர் காமர் மையத்தில் முன்னாள் சட்டமா அதிபர் சீ.ஆர். டிசில்வா தலைமையில் உண்மை யைக் கண்டறியும் ஆணைக்குழு பொது மக்களிடம் சாட்சியங்களைத் திரட்டும் பணிகளை நேற்று முதல் ஆரம்பித்துள் ளது.

எதிர்வரும் 25 ஆம்திகதி வரையில் முக்கிய அரசாங்க அதிகாரிகள், இராஜ தந்திரிகள் மற்றும் புத்திஜீவிகள் ஆகியோ ரிடம் சாட்சியங்கள் திரட்டப்பட உள்ளதாக ஆணைக் குழுவின் செயலாளர் எஸ்.எம். சமரக்கோன் தெரிவித்துள்ளார்.

எஸ்.எல். குணசேகர, வீ.ஆனந்தசங்கரி, கொட்ப்ரி குணதிலக்க, ஹிராந்தி விஜய மான, மங்கள சமரவீர, நிஹால் ரொட்ரி கோ, ஒஸ்டின் பெர்னாண்டோ, ராஜன் ஆர் வாதன், ராஜீவ விஜேசிங்க, மானேல் அபே சேகர, ஜயந்த தனபால மற்றும் அசோக குணசேகர ஆகியோரிடம் சாட்சியங்கள் திரட்டப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகி றது.

இதேவேளை எதிர்வரும் 14 ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு வவுனியாவிற்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (6-2)

# இலங்கைத் தமிழர்களை தங்க வைப்பதற்காக சிறைச்சாலையை தயார்படுத்துகிறது கனடா

'எம்.வி.சன்சி' எனும் கப்பலில் வந்து கொண்டிருப்பதாகக் கருதப்படும் இலங் கைத் தமிழர் குடியேற்றவாசிகளை தடுத்து வைப்பதற்காக கனடிய அரசாங்கம் சிறைச் சாலைகளை தயார்ப்படுத்தி வருகிறது. இக் கப்பல் இன்னும் சில தினங்களில் கனடா வின் மேற்குப் பிராந்திய மாநிலமான பிரிட் டிஷ் கொலம்பியாவை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் கப்பலில் வரும் மேற்படி நபர்கள் மாப்பிள் ரிட்ஜ் எனும் மாவட்டத்தி லுள்ள இரு சிறைச்சாலைகளில் தங்க வைக் கப்படலாம் என தனக்கு அறிவுறுத்தப்பட்டுள் ளதாக அம் மாவட்ட அதிகாரி ஜோன் லீபர்ன் கூறியுள்ளார்.

எதிர்வரும் நாட்களில் சுமார் 500 தமிழ் குடியேற்றவாசிகள் அல்லது அகதிகளை கையாள்வதற்கு தயார் நிலையில் இருக்கு மாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ள தாக கனடிய ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

இக்கப்பலில் சுமார் 100 ஆண்களும் 80 பெண்களும் இருக்கலாம் எனத் தெரிவிக் கப்படுகிறது. எனினும் இக் கப்பல் சரியாக எப்போது கனடாவை வந்தடையும் எனத் தெரியாதுள்ளது என லீபர்ன் கூறியுள்ளார்.

இக்கப்பலில் தமிழீழ விடுதலைப் புலி களின் அங்கத்தவர்களும் இருக்கலாம் என கனடிய அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். "இக்கப்பல் யுத்தத்தில் சிக்கியிருந்த, அறியப் பட்ட பயங்கரவாதிகள் நீண்டகாலம் செயற்பட்ட பகுதியுடன் தொடர்புடையது" என வான்கூவர் குடிவரவு சட்டத்தரணி ரிச்சர்ட் குர்லண்ட் தெரி வித்துள்ளார்.

இதேவேளை மற்றொரு கப்பல் கனடிய கடற்பரப்பை நோக்கி வந்தால் ஆச்சரிய மில்லை என இலங்கைக்கான கனடாவின் முன்னாள் உயர்ஸ்தானிகர் மார்ட்டின் கொல கொட் கூறியுள்ளார்.

இது குறிப்பாக தமிழ் மக்களுக்கு அபிமான இடமாக விளங்குகிறது. பல வருடங்களாக கனடாவை அடைவதில் அவர்கள் அதிக வெற்றி கொண்டுள்ளனர். 2003 ஆம் ஆண்டில் மாத்திரம் உலகின் ஏனைய அனைத்து பகுதிகளையும் விட இங்கு அதிக எண்ணிக்கையானோர் உள்வாங்கப்பட்டனர் என அவர் தெரிவித்துள்ளார். (6-2)

# ஈழத்தவர் வரலாறு

2

## (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலி ருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)


### 01. ஈழநாடும் ஈழத்தவர்களும்

கி.மு. 2ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஏராதோஸ்தீனிஸ், குளோடியஸ் தொலமி ஆகிய இரு வானவியல், புவியியல் அறிஞர்கள் அக்காலகட்டத்தில் வரைந்த தேசப்படங்களில் இலங்கைத்தீவு குறிக்கப்பட்டுள்ளது. ஏராதோஸ்தீனிஸ் தனது படத்தில் இலங்கைத் தீவை 'தப்ரோபேன்' எனக் குறித்துள்ளார்; அவரது தேசப்படத்தைப் பின்பற்றி வரைந்த தொலமியும் இலங்கைத்தீவுக்கு 'தம்ரபேன்' என்ற பண்டைய பெயரையே குறித்துள்ளார். தாமிரபர்ணி என்ற பெயர் கிரேக்க அறிஞர்களால் 'தப்ரோபேன்' எனவும் 'தப்ரபேன்' எனவும் உச்சரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்றுப் பனுவலாக் கொள்ளப்பட்டும் மகாவம்சத்தில் தாமிரபர்ணிப் பிரதேசம், 'தம்பபன்ன' எனக் குறிக்கப்படுகின்றது. தாமிரவர்ணி என்ற சமஸ்கிருத வார்த்தையின் பாளிமொழி உச்சரிப்பே தம்பபன்ன எனக் கொள்ளலாம். தாமிரபர்ணி என்று இலங்கைத்தீவு முழுவதும் அல்லது தென்பகுதி மட்டும் அழைக்கப்பட்டமைக்குரிய காரணங்கள் பலவாகவுள்ளன. இலங்கையில் தென்கிழக்கே பாய்கின்ற தம்மன என்ற ஆற்றின் பெயரால் 'தம்பன்னி' என்ற பிரதேசப் பெயர் உருவாகியது என எச்.பாக்கர் கருதுகிறார். விஜயனும் தோழரும் இளைப்பாறும் பொருட்டு உள்ளங்கைகளை நிலத்தில் வைத்துக்கொண்டு உட்கார்ந்தபோது உள்ளங்கைகள் செம்பு நிறமாக (தாமிரமாக) மாறியதால் அப்பகுதிக்குத் 'தம்பபன்னி' என்ற் பெயர் உண்டானதாக ஐதிகக் கதையுள்ளது.

இலங்கைத்தீவின் தென்பெரும்பகுதி தாமிரபர்ணி என்று அழைக்கப்பட்டமைக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க காரணமாக, இந்தியத் தமிழ்நாட்டு மாநிலத்தின் திருநெல்வேலி மாவட்டத்தில் பாய்கின்ற தாமிரபர்ணிநதி வடிநிலப் பிரதேசத்தோடமைந்த தொடர்பின் விளைவைக் குறிப்பிடலாம். மேற்குக் கரையோர மலைத்தொடரில் உற்பத்தியாகின்ற தாமிரபரணி ஆறு, திருநெல்வேலி மாவட்டத்தின் புகழ்பெற்ற பண்டைய குடியிருப்புப் பகுதியான ஆதிச்ச நல்லூர் ஊடாகப் பாய்ந்து, மன்னார்க்குடாவில் இந்து சமுத்திரத்துடன் சங்கமமாகின்றது. இந்த ஆற்றுக்கு நேர்கிழக்கே இலங்கைத்தீவில் கொணா நதி (காலாஓயா) அமைந்துள்ளது.

கதம்பநதிக்கும் (அருவியாறு), கொணா நதிக்கும் இடைப்பட்ட பிரதேசமே 'தாமிர பர்ணி' என அறிஞர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆகவே, திருநெல்வேலி தாமிரபரணி ஆற்றுவடிநில மக்கள், பல்வேறு காரணங்களுக்காக இலங்கையின் மேற்குக் கரையோரத்தில் குடியேறிவாழ்ந்துள்ளனர். அவர்கள் தமது தாயகப் பெயரைத் தாம் குடியேறிய பகுதிக்குமிட்டனர் எனக் கொள்வது மிகவும் ஏற்ற காரணமாகும்.




சிங்கள வரலாற்றாசிரியரும், தொல்லியலாய்வாளருமான பரணவிதானவின் ஆய்வுக்கூற்று இதனை உறுதிசெய்யும். அவர் 'விஜயனின் வருகைக்கு முன்னரே முத்துக்குளிக்கவந்த தாமிரபர்ணி மக்கள் கதம்பநதிக்கரையை அண்டிய பகுதிக்குத் தாமிரபர்ணி எனப் பெயரிட்டிருக்கலாம்' எனக் கூறிப்போந்தார். மன்னார்க்குடா முத்துக்குளித்தலுக்குப் புகழ்பெற்ற முத்துச் சலாபமாகும். தாமிரபரணி ஆற்றின் தென் கரையோர ஆதிச்ச நல்லூரில் கிடைத்த ஈமத் தாழிகளை ஒத்தவையே, இலங்கையின் தாமிரபர்ணிப் பிரதேசத்தில் பொம்பரிப்பு எனுமிடத்தில் கிடைத்த ஈமத்தாழிகளாகும் எனத் தொல்லியலாய்வுகள் இன்று நிரூபித்துள்ளன. பொம்பரிப்பிற் கிடைத்த சிறப்புமிக்க தொல்லியற்றடயங்கள் பாண்டிநாட்டுத் தாமிரபர்ணி மக்களுக்கும் இலங்கைத் தம்பபன்ன மக்களுக்குமிடையேயிருந்த கலாசார ஒருமைப்பாட்டை எடுத்துக்காட்டும் வரலாற்றேடுகள் எனின் மிகையாகாது.

அத்துடன் இலங்கை வரலாற்று நூல்களில் மட்டுமன்றி இந்தியா, கிரேக்கம் முதலான நாட்டு இலக்கியங்களில் இருந்தும் கிடைக்கப்பெற்ற ஆதாரபூர்வமான குறிப்புகளிலிருந்து கி.மு.5 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே தாமிரபர்ணி என்ற நிலப்பரப்பின் பெயரால் இலங்கை பிறநாடுகளில் அறிமுகமாகியிருந்தது என்பது தெளிவாகின்றது.

### 1.2. நாகதீபம்

இலங்கைத் தீவின் தென் பெரும்பகுதி தாமிரபர்ணி என்றழைக்கப்பட்டவேளையில் வடபகுதி நாகதீபம் அல்லது நாகதீவு என வழங்கப்பட்டுள்ளது. இலங்கையின் பூர்வ குடிகளான நாகர்கள் வாழ்ந்த பிரதேசம், பண்டைநாளில் நாகதீபம் எனப்பட்டது. இப்பெயர் குறிக்கும் ஆள்புலப்பரப்பு சுருங்கியும் விரிந்தும் ஆய்வாளர்களின் கண்டுணர்வுகளில் கூறப்பட்டுள்ளது. நாகதீபம் என்ற பெயர் சுட்டும் ஆள்புலம் நயினாதீவு எனச் சிலவிடத்தும், அவ்வாறன்று யாழ்ப்பாணக் குடாநாடு என சில விடத்தும் கருதப்பட்டுள்ளது. எனினும் இலங்கைத்தீவின் வடபெரும் ஆள்புலத்தின் பண்டைய பெயர் நாகதீபம் எனக் கொள்வதே ஏற்புடைய தாகவுள்ளது. வரலாற்றுக்காலத்தில் நாக தீபம் என்ற பிரதேசம் இலங்கையின் இன்றைய வடமாகாணத்தைக் குறித்ததாக டபிள்யூ, கெய்கர் குறித்துள்ளார். மகாவில்லாச்சியா (மதவாச்சி) க்கு வடக்கேயுள்ள பகுதியையே நாகதீபம் குறித்ததாக செலிக்மன் என்பார் கூற்று. இலங்கையின் வடபகுதியே வரலாற்றுக்கால நாகதீபம் என்பது பாக்கர் என்பவரின் முடிவு. மகாவம்சத்தில் நாகதீவு பற்றிய குறிப்புகள் பலவுள்ளன. இரு நாக மன்னர்களுக்கிடையிலான தகராறைத் தீர்த்துவைப்பதற்காகப் புத்தர் நாகதீவிற்கு இரண்டாவது முறையாக வருகைதந்தார் என

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

மகாவம்சம் குறிப்பிடுகின்றது. வசபன் என்ற மன்னன் (கி.பி.127 - 171) அனுராதபுரத்தை ஆண்டகாலத்தில் இசிகிரியன் என்பவன் நாகதீபத்தை ஆண்டதாகவல்லிபுரத்தில்கிடைத்தபொற்சாசனம் குறிப்பதிலிருந்து, இலங்கையின் வடபகுதி நாகதீபம் என வழங்கப்பட்டமை நிரூபணமாகின்றது. (தொடரும்)

---

## முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## உள்துறை அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்கள் சிலருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் தோல்வியடைந்து நீண்ட காலம் கடந்துள்ள நிலையிலும் சில பிரதி அமைச்சர்கள் தங்களது உத்தியோக பூர்வ வாசஸ்தலங்களை விட்டு வெளியேற மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொழும்பு சுமிட் தொடர்மாடிக்கட்ட தொகுதியில் அமைந்துள்ள உத்தியோக பூர்வ வாசஸ் தலங்களில் இருந்து இவர்கள் வெளியேற மறுப்புத் தெரிவித்து வருவதாகக் குறிப்பிடப் படுகிறது.

குறித்த முன்னாள் பிரதியமைச்சர்களுக்கு எதிராக இறுதி எச்சரிக்கை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச் சின் செயலாளர் டி திஸாநாயக்க தெரிவித்துள் ளார்.

1969ஆம் ஆண்டு அரச சொத்துக்களை கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் குறித்த முன்னாள் பிரதியமைச்சர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் பிரதி அமைச்சர்களான வடிவேல் சுரேஸ் ,எம்.செல்லசாமி மற்றும் அமீர் அலி ஆகியோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இதேவேளை ,முன்னாள் பிரதியமைச்சர்களான வஜிர அபேகுணவர்த்தன,மனோ விஜேரட்ன ,ரவி சமரவீர மற்றும் பந்துல பஸ்நாயக்க ஆகியோர் உத்தியோக பூர்வ வாச்ஸ்தலத்திற்காக செலுத்தப்படவேண்டிய வாடகைய்ய இதுவரையில் செலுத்தவில்லை என குறிப்பிடப்படுகிறது.

இவர்களுக்கு எதிராகவும் விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப் படுகிறது. (6-2)

## புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் இலங்கை–கனடா பேச்சுவார்த்தை

புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் கனடாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகருக்கும் கனடிய குடிவரவு அமைச்சருக் கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல் மற்றும் தமிழீழ விடுதலைப்புலி நடவடிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக வெளி விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

கனடிய வெளிவிவகார அமைச்சு புலனாய்வுப் பிரிவினர் கனடிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவு குடிவரவு மற்றும் குடியுரிமை பிரிவு உள்ளிட்ட அதிகாரிகளுடனும் இலங்கை உயர்ஸ்தானிகர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

புலி ஆதரவு அமைப்புக்களின் மூலம் கனடாவில் விடுதலைப் புலிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக இலங்கை உயர்ஸ்தானிகர் விளக்கியுள்ளார்.

சர்வதேசப் பயங்கரவாதம் தொடர்பான அவதானம் சிதைவடைந்துள்ளதாகத் தெரிவித்த அவர் பயங்கரவாதம் மற்றும் சட்ட விரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுப்பதற்கு உலக நாடுகளிடையே ஒத்துழைப்பு அவசியமானதென குறிப்பிட்டுள்ளார். (6-2)

## நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோக சம்பவங்கள்

## தடுப்பதற்கு புதிய சட்டம்

(கொழும்பு)

நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோக சம்பவங்களை தடுப்பதற்கு புதிய சட்டம் ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கையடக்கத்தொலைபேசிகள், கணிகள் மற்றும் இணையம் உள்ளிட்ட புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோக நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தக்கூடிய வகையில் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளது.


இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு தண்டனை வழங்குவ்தற்கு போதிய ஏற்பாடுகள் இலங்கைச் சட்டத்தில் தற்போது கிடையாது என மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள் ளார்.



துஷ்பிரயோகம் தொடர்பில் 1929ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட சட்டமே இன்னமும் நடைமுறையில் காணப்படுவ தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கையடக்கத்தொலைபேசிகளின் மூலம் பெண்களினதும் ,சிறுவர்களினதும் பாலியல் ரீதியான படங்களைப் பிடித்து அவற்றை இணையம் ஊடாக பிரசுரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


புதிய சட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் இவ்வாறான குற்றச்செயல்களை தடுத்து நிறுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (6-2)

# வடமராட்சி பொலிகண்
# மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகா
# ஆடிப்பூர தீர்த்தோற்சவ சி


## பிரதம குருவின் அருள் ஆசி செய்திகள்



சைவத்தையும் தமிழையும் இரு கண்களாக போற்றி வாழும் தமிழ் மக்கள் எமது கலை, கலாசாரம், பண்பாடு போன்றவற்றை மதித்து பேணிக்காத்து வருவது மிகவும் பாராட்டத்தக்கது. இந்த வகையிலே மக்கள் அனைவரும் ஒன்று கூடி இறைவழிபாடு நடாத்தும் இடம் ஆலயம். எனவே மேற்படி ஆலயத்தின் ஆடிப்பூர நன்னாளில் சமுத்திர தீர்த்தோற்சவம் நடைபெறுவது மிகவும் ஓர் சிறப்பம்சமாகும். இப்புண்ணிய நன்னாளில் யாவரும் தீர்த்தம் ஆடி எமது பாவ வினைகளை போக்கி பத்திரகாளியை வணங்கி நலமே வாழ அனைவருக்கும் ஆசி கூறி அமைகின்றேன். சர்வேஜனா சுகினோ பவந்து

ச.வைத்திநாதக்குருக்கள்
பொலிகண்டி

## பரிபாலன சபைசெயலாளரின் வாழ்த்துச்செய்தி

பொலிகண்டி கிழக்கு மருதாம்புலம் வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு 2010 யூன் 03 இல் வியாழக்கிழமை அவிட்ட நட்சத்திரம் கூடிய சுபவேளையில் கும்பாபிஷேகம் நடந்தேறி இன்று அம்பாள் முதல் தடவையாக கந்தவன சமுத்திரத்தில் கடல் தீர்த்தம் ஆடி சகல பக்த அடியார்களுக்கும் அருள் பாலிக்கும் இன்நாளிலே எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் அருட்கடாட்சம் வேண்டி எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்கப்பெற யானும் அம்பாளை இறைஞ்சி வேண்டுகிறேன். அம்பாளின் திருவருள் எங்கும் நிறைவதாக

நடராசா பாஸ்கரசோதி,
செயலாளர், ஆலய பரிபாலன சபை,
பொலிகண்டி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம்.

## ஆலயத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

பொலிகண்டி மருதாம்புலத்தில் வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் வருடாந்த "தீர்த்தோற்சவம்" இன்றாகும். இந்த தீர்த்தோற்சவ நன்னாளிலே அம்பிகையின் அருட்கடாட்சம் நிறைந்த அற்புதமான மகிமை பொருந்திய நன்னாளிலே அம்பாள் சமுத்திரத் தீர்த்தமாடி சகலருக்கும் அருள்பாலிக்கின்ற இத்தீர்த்தோற்சவமானது மிகவும் சிறப்பாக நடைபெற எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடைக்கண்ணாலே பார்ப்பாள் – அம்பாள் கவலைகள் யாவும் தீர்ப்பாள்.

எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுடைய அனுக்கிரகங்கள் யாவையும் பெற்று ஊரும் உறவுகளும் உய்ய எனது ஆத்மார்த்தமான அன்பு கலந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கி.கதிர்காமநாதன் ஐயா,
தலைவர், ஆலய பரிபாலன சபை,
மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்,
பொலிகண்டி,வல்வெட்டித்துறை.

## ஆலய வர

**பூந்தென்றல் போலவரும் காளியம்மா – தாயே**
**புயலாகி– வந்ததுண்டு காளியம்மா**
**சேர்ந்தொன்றாய் அழைக்கின்றோம் காளியம்மா – எங்கள்**
**கிராமத்தை காத்திடுவாய் காளியம்மா.**

இற்றைக்கு 350 ஆண்டுகளுக்கு முன் பொலிகண்டி மருதாம்புலம் என்னும் பதியில் இலுப்பை மரத்தை தல விருட்சமாக கொண்டு, இவ்விலுப்பை மரத்திலே அம்பாளுடைய தரிசனம் கிடைக்கப் பெற்ற அன்பர்கள் அவ்விடத்திலே பத்திரகாளி அம்பாளை வழிபாடு செய்து வருங்காலங்களில் அம்பாளினுடைய தெய்வீக அனுக்கிரகம் பலரிற்கு வெளிப்படையாக கிடைக்கப் பெற்றதாகவும் அதன் பேறாக அவ்வடியவர்கள் சிறுகுடிலமைத்து தங்களுடைய வழிபாடுகளையும் நேர்த்திகளையும் செய்து வந்ததாகவும் அறியமுடிகிறது. காலப்போக்கில் தெய்வீகத் தன்மையினால் அடியவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து சுண்ணாம்பு கற்களினால் ஒரு சிறிய ஆலயம் அமைத்து அம்பாளின் திருமுகத்தையும் ஒரு சூலாயுதத்தையும் வைத்து வணங்கி வரலாயினர்.

இவ்வாறு காலத்திற்கு காலம் தெய்வீகத் தன்மையின் சிறப்பினால் ஆலயம் மிகவும் பிரபல்யம் பெற்று வரலாயின. இவ்வாலயம் பூலோக கற்பகதரு என்று சொல்லப்படுகின்ற பனைகள் கொண்ட சூழலில் அமைந்துள்ளது.

இவ்வேளையில் சுண்ணாம்பு கற்களினால் அமைக்கப்பெற்ற ஆலயம் பழுதடைந்த நிலையில் இங்கே வழிபாடு செய்கின்ற அன்பர்களும், இவ்வாலயத்தோடு மிகவும் நெருக்கமுடையவர்களுள் குறிப்பாக அமரர் கோப்பாய் சு.நாகலிங்கம் ஆசிரியர் அவர்களும் பொலிகண்டியைச் சேர்ந்த அவரது துணைவியார் தங்கம்மா நாகலிங்கம் அவர்களும் மேற்படி ஆலயத்தை புனர் நிர்மாணம் செய்து முன்பு கிராமிய வழிபாட்டு முறையில் பூசைகள் நடைபெற்று வந்த இவ்வாலயத்தை ஆகம, சிற்ப சாஸ்திர முறைக்கமைவாக புதியதொரு ஆலயத்தை அமைக்க அம்பிகையின் திருவுள்ளப்படி சித்தங் கொண்டார்கள். 1960 ஆம்

தேர்த் திருவிழா சிறப்புற வாழ்துவோர் - ஆலயபரிபாலனசபை, ஆலயதிலுப்பணிச்சபை, அம்பிகைமின்மன்றம், அம்பிகை பாலர் பாடசா அம்பிகை சனசமூகநிலையம், பொலிகை ஐக்கி வி.கழகம், அம்பிகை கலாமன்றம், பொலிகண்டி கிழக்கு மாதர் சங்கம், பொலிகண்டி கிழக் அபிவிருத்தி சங்கம், பொலிகண்டி கிழக்கு கமக்காரர் அமைப்பு.

மலரமைப்பு
வரதன்
பொலிகண்டி

DVD, VCD, MP3 பெற்றுக் கொள்ள
24 மணி நேரத்தில் முச்சக்கர வண்டி சேவை
அம்பிகை CD House
கொற்றாவத்தை, பொலிகண்டி. TP- 0776744000

வெளிநாடுகளிலிருந்து மிக விரைவாகவும் இலகுவாகவும் பணத்தை பெற்றுக் கொள்ளலாம்
ஓம் சரவணபவ தொலைத்தொடர்பு நிலையம்
WESTERN UNION MONEY MASTER
கொற்றாவத்தை, பொலிகண்டி. TP- 021 321 2616

தரமான துல்லியமான கேபிள் இணைப்புகளை பெற்றுக் கொள்ள
நந்தன் கேபிள் இணைப்பகம்
கந்தவனக் கோவிலடி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை. TP- 021 226 2458, 077 9037450

தரமான வெதுப்பக உற்பத்திப் பண்டங்களுக்கு
உஷா வெதுப்பகம்
பத்திரகாளி கோவிலடி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

போட்டோ, வீடியோ, ட...
மிக்சிங், அல்பம் தயா...
அனைத்தும் கணனி மு...
ஸ்ரீ சாயி ஸ்...
TP- 077 4002944

திருமண மற்றும் பூப்புனித நீராட்டு விழாக்கள் இதர விழாக்களுக்கு சிறந்த முறையில் சோடனைகள் பந்தலுக்கு நாடவேண்டிய ஒரே இடம்
ஜெயா மணப்பந்தல் சேவை
பத்திரகாளி கோவிலடி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை.
உரிமையாளர் – ந.தவராசா
TP- 077 9944478

தானியவகை மற்றும் மிளகாய் ஈர அரிசி தரமாக அரைத்துக் கொடுக்கப்படும்
கிருஷ்ணா அரைக்கும் ஆலை
"அம்மா" மிளகாய் தூள் விற்பனை செய்யப்படும்
பாலாவித் தெரு, பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

மணப்பந்தல் சோடினைகளுக்கு, கோவில்கள், வீடுகள் வர்ணப்பூச்சு வேலைகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.
கீர்த்தனன் மணப்பந்தல் சேவை
ஆலடி, பொலிகண்டி. TP- 077 2851194

தரமான ஆடை வகைகளை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள
ஸ்ரீ ரங்கம் ரெக்ஸ்ரைல்
நவிண்டில் வீதி, உடுப்பிட்டி.

மலிவு விலையில் பொருட்களை பெற்றிட
அம்மன் ஸ்ரோஸ் ரேவதி ஸ்ரோஸ்
உரிமையாளர் – S.ஸ்ரீகரன்
முருகமூர்த்தி வீதி, நெல்லியடி.
பாலாவி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

பொதிவ...
கொம்பியூட்டர் கிறாபிக்ஸ், புத்தகசாலை & போன் செய...
இல - 03, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.

...LIC LIBRARY JAFFNA.



# ...லிகண்டி திருவருள்மிகு ...காளி அம்பாள் தேவஸ்தான ...வ சிறப்பு மலர் - 12.08.2010









## பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



அருள்மிகு மருதாம்புலம் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான தீர்த்தோற்சவ நிகழ்வு சிறப்புற வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

'அம்பாளை சரணடைந்தால் கேட்ட வரம் கிடைக்கும்' என்ற நம்பிக்கையை மெய்ப்படுத்தும் நீண்ட வரலாற்றையுடைய ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் வடமராட்சிப் பொலிகண்டிப் பதியிலே உறைந்து அடியவர்கள் அனைவருக்கும் அருள் பாலித்து வருகிறார்.

அண்மையில் இவ்ஆலயம் மிகச்சிறப்பாக புனருத்தாரணம் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகத்தினையும் அதனைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகமும் இறுதி நாள் 1008 சங்காபிஷேகமும் மண்டல பூர்த்தி விழாவும் நிறைவு பெற்றிருந்தது.

பொலிகண்டிப்பதியிலே அருளாட்சி புரியும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அனுக்கிரகம் சகல ஜீவராசிகளுக்கும் கிடைத்து ஆடிப்பூர தீர்த்தோற்சவ நிகழ்வு சிறக்க பெருமனதுடன் வாழ்த்துகிறேன்.

இ.வரதீஸ்வரன்,
பிரதேசசெயலாளர்,
பருத்தித்துறை.

## ...வரலாறு

...ஆண்டு கார்த்திகை மாதம் மேற்படி ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு வெள்ளை வைர கற்களினால் மூலஸ்தானம், அர்தத மண்டபம், மகா மண்டபம் போன்றவற்றையும் சீமெந்தினால் தரிசன மண்டபம், தம்ப மண்டபம், மணிக் கோபுரம், விநாயகர், வைரவர் ஆலயங்களையும் அமைத்து 1977 ஆம் ஆண்டு சித்திரை மாதம் சுவாதி நட்சத்திரத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றதாக அறிய கூடியதாகவுள்ளது. கும்பாபிஷேகத்துடன் மூலஸ்தானத்தில் கருங்கல்லினால் செதுக்கப்பட்ட நின்ற கோலத்திலான நான்கு கைகளையுடைய அம்பாள் விக்கிரகத்தையும் அதுபோலவே ஐம்பொன்னினாலான உற்சவமூர்த்தியையும், கருங்கல்லினாலான விநாயகர், வைரவர், சிம்மம், பலிபீடம் ஆகிய மூர்த்திகளையும் பிரதிஷ்டை செய்தார்கள். இக்காலந் தொடக்கம் சமயகிரியைகள் ஆகம முறைப்படி நடைபெற்று வருகிறது. மூன்று காலப் பூசைகளும் அவ்வாறே முறைப்படி நடைபெற்று வருகின்றது. அத்துடன் நவராத்திரி,, சிவராத்திரி, கேதாரகௌரிகாப்பு, சர்வாலய தீபம், மாசிமகம், பிள்ளையார் கதை, தைப்பொங்கல், பங்குனி திங்கள் போன்றனவும் ஆடிப்பூரத்தை தீர்த்தமாகக் கொண்ட 10 நாள் அலங்கார உற்சவமும் நடைபெற்று வருகின்றன. 1977 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகத்தின் பின் ஆலயம் ஒரு பரிபாலன சபையின் கீழ் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து காலத்திற்கு காலம் பல திருப்பணிகள் நடைபெற்று வந்திருக்கின்றன.

ஏறத்தாழ 28 ஆண்டுகள் கடந்தமையினாலும் சில கட்டிடங்கள் சிதைவுற்றமையினாலும் ஆலய பரிபாலன சபையினர் ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்து மகா கும்பிஷேகம் செய்ய எண்ணினார்கள். பரிபாலன சபையின் வேண்டுகோளிற்கிணங்க அடியவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து ஆலய நிர்மாணிப்பில் பங்கேற்றுக் கொண்டார்கள். இந்நாட்டு மக்களுடைய ஒத்துழைப்பும் புலம்பெயர்ந்து அயல்நாடுகளில் வாழும் மக்களின் அளப்பரிய பங்களிப்பும் தற்போதுள்ள ஆலயம் சிறப்புற அமைய ஊன்றுகோலாக இருந்தது.

விநாயகரிற்கு துவிதள விமானமும் (சுந்தர விமானம்) அதுபோலவே மகாலட்சுமிக்கும் முருகனிற்கும் அமைத்தார்கள். அத்துடன் தட்சணாமூர்த்தி, சண்டிகேஸ்வரி, வைரவர் ஆகிய மூர்த்திகளுக்கும் அர்த்தநாரீஸ்வரரிற்கும் ஆலயமைத்தார்கள். தெய்வீகம் பொருந்திய நவக்கிரகங்களுக்கு ஆலயம், மூலஸ்தான திரிதள (மூன்று)விமானம், மகாமண்டபதேவசபை என்பவற்றையும் மகாமண்டபத்தை நவீன சிற்ப முறையிலும் ஸ்நபன மண்டபத்தை நம்மியமான வில்லுமண்டலமாகவும் சிறப்புற அமைத்தார்கள். எங்குமில்லாத முறையில் நவக்கிரக பூஜாபத்தியின் பிரகாரம் ஒன்பது நவக்கிரகங்களும் உரிய தேவிமார்களோடு கூடியதாக விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்ட இவ்வாலயத்தில் கருங் கல்லினாலான விக்கிரகங்கள் தமிழ் நாடு மகாவலிபுரசிற்பகலாசாலையில் இருந்து தருவிக்கப்பட்டமையாகும். மேலும் ஆலய கோபுர வாசல்கள் கம்பீரமாக காட்சியளிப்பதுடன் அதற்கு முன் அமைக்கப்பட்ட வில்லுமண்டபம் சிறப்பாக இருப்பதை காணக் கூடியதாக இருக்கிறது.

அம்பாளினுடைய மகாகும்பாபிஷேகம் கடந்த 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 திகதி வியாழக்கிழமை அன்று அவிட்ட நட்சத்திரத்தில் மகாகும்பாபிஷேகம் பக்தி பூர்வமாக நடைபெற்றது. தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகமும் 48 ஆம் நாள் 1008 சங்காபிஷேகமும் நடைபெற்று மண்டல பூர்த்தி விழாவும் இடம்பெற்றது.

இப்படியாக மிகவும் தெய்வீகத்தன்மை பொருந்திய பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆடிப்பூர நன்னாளில் சமுத்திர தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறுகின்றது. எனவே இப்புண்ணிய நாளில் நாம் எல்லோ ரும் அம்பிகையை வழிபட்டு நிறைவுடன் வாழ்வோமாக.

குறிப்பு:- பத்திரகாளி அம்பாளுடைய ஆலய வரலாற்றினை திட்டவட்டமாக எம்மால் கூற முடியாவிட்டாலும் எமது கிராமத்தில் உள்ள பெரியோர்கள், வழிபடும் அன்பர்கள் ஆகியோர்களிடமிருந்து ஊகிக்கப்பட்டவைகளையும் செவிவழி வந்த கதை களையும் கொண்டே தொகுக்கப்பட்டதாகும்.

பத்திரகாளி அம்பாளின்
அடியவன்.


...டசாலை,
...டி கிழக்கு கிராம

சகல விதமான விசேட வைபவங்கள் மற்றும் ஏனைய தேவைகளுக்கும் குளிரூட்டப்பட்ட சொகுசு கார் மற்றும் வான் சேவைகளுக்கு நாடுங்கள்
JENA TRAVELS
தொடர்புகளுக்கு - 0777111662
பத்திரகாளி கோவிலடி,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

Internet browsing, Skypc, Video.Calls Net 2 Phone, Photo.Copy, Fax, Scanning, Laminating, Computer typing, Printing, Games, DVD ,CD Writing, Audio Video Recording,Email,Internet Class.
அனைத்திற்கும்
NET PLUS
(NET CAFE)
TP.021 2262417
021 3213041
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.
www.netplus@ gmail.com

மிளகாய் மற்றும் தானியவகைகளையும் அரைத்துப் பெற்றிடவும்,மளிகை பொருட்களை மலிவாக பெறவும் நாடுங்கள்.
கணபதி அரிசிஅரைக்கும் ஆலை குரோசறி
கொற்றாவத்தை சந்தி,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.
TP- 021 2263882
077 6179076

புளூ கெவன் ஹோட்டல்
15 இற்கு மேற்பட்ட முற்றிலும் குளிர் ஊட்டப்பட்ட நீச்சல் தடாகத்துடன் வரவேற்பு மண்டபமும் தங்கும் இடமும் உணவகமும் அமைந்த இடம்
புளூ கெவன் ஹோட்டல் உடன் புளூ கெவன் சிற்றி நீச்சல் தடாகம்
இல - 70,
றக்கா றோட்,
யாழ்ப்பாணம்.
இல - 166,
01ம் குறுக்கு வேம்படி,
யாழ்ப்பாணம்.
தொடர்புக்கு - 021 222 9958

உதய தாரகை கல்விக் கழகம்
தரம் 01 முதல் 11 வரையான வகுப்புக்கள் மற்றும் A/L கலை வர்த்தக வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.
TP- 021 2262434
077 6738515

உயர் தொழில் நுட்பத்துடன் கூடிய இன்ரநெற் மூலம் முகம் பார்த்துக் கதைத்தல்.
மணி நெற் கொம்
Net Browsing, Net 2 Phone -(Rs3.00)
வெளிநாட்டிலிருந்து வெஸ்ரன் யூனியன் மூலம் உடனடியாக பணத்தை பெற்றுக் கொள்ளலாம்
துரித பாரஷல் சேவை
லண்டன்,கனடா,சுவிஸ்.03 kg விற்கு குறையாத பொதிகளுக்கு 01kg-500.00 வீதம்
(யாழ் . கொழும்பு வான் சேவை)
மகா வித்தியாலய வீதி,
நெல்லியடி.
TP- 021 226 4826
021 226 4877
077 3644244

# 40 தொழிற்சாலைகளை உள்ளடக்கிய பாரிய கைத்தொழிற்பேட்டை

## அச்சுவேலியில் நிர்மாணிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

அச்சுவேலியில் 40 தொழிற்சாலைகளை உள்ளடக்கிய பாரிய கைத்தொழில் பேட்டையொன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள இக் கைத்தொழிற்பேட்டைக்கான உட்கட்டமைப்பு வசதிகளுக்கென 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படவுள்ளன.

இந்நிதிக்கான அங்கீகாரத்தை தேசிய திட்டமிடல் திணைக்களம் வழங்கியுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் இக்கைத்தொழில் பேட்டைக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், இதில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான இணக்கத்தினையும் முதலீட்டாளர்கள் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

யாழ்.அச்சுவேலிப் பகுதியில் ஆடைக் கைத்தொழிற்சாலைகள் மற்றும்கைத் தொழில் பேட்டைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கென 65 ஏக்கர் காணி பெறப்பட்டுள்ளதுடன், இதில் 25 ஏக்கர் காணியில் ஆடைக்கைத்தொழிற்சாலைகளும் 40 ஏக்கர் காணியில் கைத்தொழில் பேட்டையும் அமைக்கப்படவுள்ளன.

இவற்றிக்கான செயற்திட்டம் ஒன்று தயா ரிக்கப்பட்டு வடபகுதி அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணி மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கும் கையளிக்கப்பட்டு அதன் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

கைத்தொழிற்பேட்டைகளை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக அப்பகுதியில் நீர், மின்சாரம் மற்றும் கட்டடங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு மற்றும் பொது வசதிகளையும் ஏற்படுத்தவென 10 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்படவுள்ளதுடன் கைத்தொழில் பேட்டையில் அமையவுள்ள 40 தொழிற்சாலைகளை நிர்மாணித்து வழங்குவதற்கு வெளிநாடுகளின் நிதியுதவியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (6-2)

# விளையாட்டு போட்டி

(காரைநகர்)

காரைநகர் காரை கிட்ஸ் பார்க் இன் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் ச்னிக்கிழமை காலை 8.30 மணிக்கு காரை கிட்ஸ் பார்க் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காரை கிட்ஸ் பார்க் தலைவர் க.நேர்தி ரானந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சிறுவர் பராமரிப்பு நன்நடத்தைகள் திணைக்கள ஆணையாளர் க.விஸ்வரூபன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-4-246)

# கனடாவை நோக்கிச் செல்ல மேலும் 2 கப்பல்கள் ஆயத்தம்

## கலாநிதி ரொஹான் குணரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை சட்ட விரோத குடியேறிகளை ஏற்றிய மேலும் இரண்டு கப்பல்கள் கனடா நோக்கிச் செல்ல ஆயத்தமாவதாக பயங்கரவாதம் தொடர்பாக நிபுணர் ரொஹான் குணரட்ண தெரிவித்துள்ளார்.

இந்தக்கப்பல்களில் 500 தமிழ் சட்ட விரோதக் குடியேறிகள் பயணிக்க உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த சட்டவிரோத குடியேறிகளில் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களும் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது கனடாவை நோக்கி பயணித்து வரும் இலங்கை சட்டவிரோத குடியேறிகளை கொண்ட கப்பலுக்கு அந்நாட்டு அதிகாரிகள் அளிக்கும் மரியாதையின் அடிப்படையில் ஏனைய இரண்டு கப்பல்களும் பயணத்தை தொடரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடிய அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் விழிப்புடன் செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (6-2)

# நிறைவேற்றதிகார பிரதமர் முறைமை குறித்து ரணில் விளக்க வேண்டும்

## லால்காந்த கோரிக்கை

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார பிரதமர் முறைமை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்குப் பதிலாக நிறைவேற்று அதிகார பிரதமர் முறைமை அமுல்படுத்தப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும், நாட்டு மக்களுக்கு இது குறித்து விளக்கமளிக்கப் படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகார பிரதமர் முறைமை தொடர்பில் விளக்கமளிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எவ்வித முனைப்பையும் காட்டவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே ,பேச்சுவார்த்தை நடத்தி வரும் எதிர்க்கட்சித் தலைவரேனும் இந்த விடயங்கள் குறித்து நாட்டு மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குருநாகலில் இடம்பெற்ற சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (6-2)

# 12.08.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- கிமு 30 - மார்க் அந்தோனி போரில் தோல்வியடைந்ததை அடுத்து எகிப்தின் கிளியோபாத்ரா தற்கொலை செய்து கொண்டாள்.
- 1281 - மொங்கோலியப் பேரரசன் குப்ளாய்கானின் கடற்படைகள் ஜப்பானை அணுகும் போது சூறாவளியில் சிக்குண்டு இறந்தன.
- 1480 - ஒட்டோமான் படையினர் இஸ்லாம் மதத்திற்கு மாற ஒப்புக்கொள்ளாத 800 கிறிஸ்தவர்களை தலையை சீவிக் கொன்றனர்.
- 1499 - வெனிசியர்களுக்கும் ஒட்டோமான் துருக்கியர்களுக்கும் இடையில் முதற்போர் இடம்பெற்றது.
- 1833 - சிக்காகோ அமைக்கப்பட்டது.
- 1851 - ஐசாக் சிங்கர் தனது தையல் இயந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1853 - நியூசிலாந்து சுயாட்சி பெற்றது.
- 1877 - அசாப் ஹோல் என்பவர் செவ்வாய்க் கோளின் டெய்மோஸ் என்ற சந்திரனைக் கண்டுபிடித்தார்.
- 1883 - கடைசி குவாகா (வரிக்குதிரை வகை) ஆம்ஸ்டர்டாமில் இறந்தது.
- 1914 - முதலாம் உலகப் போர்: பிரித்தானியா ஆஸ்திரியா - ஹங்கேரியுடன் போரை அறிவித்தது. பிரித்தானிய இராச்சியத்தின் அனைத்து குடியேற்ற நாடுகளும் இதனுள் அடங்கின.
- 1952 - மொஸ்கோவில் 13 யூத இன அறிவியலாளர்கள், கவிஞர்கள் கொல்லப்பட்டனர்.
- 1953 - சோவியத் ஒன்றியம் ஜோ 4 என்ற தனது முதலாவது அணுவாயுதச் சோதனையை நடத்தியது.
- 1960 - எக்கோ 1 என்ற முதலாவது தொலைத்தொடர்புசெய்மதி ஏவப்பட்டது.
- 1964 - இனவெறிக் கொள்கை காரணமாக தென்னாபிரிக்கா ஒலிம்பிக்கில் விளையாடத் தடை செய்யப்பட்டது.
- 1978 - ஜப்பானும் மக்கள் சீனக் குடியரசும் தமக்கிடையே நட்புறவு, அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தின.
- 1981 - ஐபிஎம் தனி மேசைக் கணனி வெளியிடப்பட்டது.
- 1985 - ஜப்பானில் இரண்டு பயணிகள் விமானங்கள் மோதிக் கொண்டதில் 520 பேர் கொல்லப்பட்டனர். 4 பேர் காப்பாற்றப்பட்டனர்.
- 1990 - வீரமுனைப் படுகொலைகள், 1990அம்பாறை, வீரமுனையில் நானூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1990 - அமெரிக்கா, தென் டகோட்டாவில் டிரன்னொசோரஸ் என்னும் டைனசோரின் முழுமையான எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது.
- 2000 - கே-141 கூர்ஸ்க் என்ற ரஷ்யக் கடற்படை நீர்மூழ்கிக் கப்பல் பயிற்சியின் போது 118 பேருடன் பாரெண்ட்ஸ் கடலில் மூழ்கியது.
- 2005 - இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொழும்பில் அவரது வீட்டில், நீச்சல் தடாகத்தில் நீராடும் போது சுடப்பட்டு அடுத்த நாள் இறந்தார்.
- 2005 - மாலைதீவுகளில் அரசுக்கெதிராக கிளர்ச்சி இடம்பெற்றது.
- 2005 - இலங்கையின் தமிழ் வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர் ரேலங்கி செல்வராஜா கொலை செய்யப்பட்டார்.
- 2006 - இலங்கையின் புத்திஜீவிகளில் ஒருவரான கேதீஸ் லோகநாதன் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### பிறப்புகள்

- 1887 - எர்வின் சுரோடிங்கர், ஆஸ்திரிய இயற்பியலாளர் (இ. 1961)
- 1924 - ஸியா உல் ஹக், பாகிஸ்தான் ஜனாதிபதி (இ. 1988)
- 1971 - பீட் சாம்ப்ரஸ், அமெரிக்க டெனிஸ் வீரர்

### இறப்புகள்

- கிமு30-கிளியோபாத்ரா (பி. கிமு 69)
- 1848-ஜோர்ஜ் ஸ்டீவன்சன், தொடரூந்து கண்டுபிடித்தவர் (பி. 1781)
- 1955-தோமஸ் மான், ஜேர்மனிய எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1887)
- 1955-ஜேம்ஸ் சம்னர், அமெரிக்க வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர். (பி.1887)
- 1964-இயான் பிளெமிங், ஆங்கில இதழியலாளர், எழுத்தாளர் (பி. 1908)
- 1973-வால்டர் ஹெஸ், சுவிஸ் மருத்துவர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1881)
- 1973-கார்ள் சைக்ளேர் ஜேர்மனிய வேதியியலாளர் நோபல் பரிசு பெற்றவர் (பி.1898)
- 1979-ஏர்ண்ஸ்ட் போரிஸ் செயின், ஜேர்மனிய வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் பி. 1906)
- 1989-வில்லியம் ஷாக்லி, அமெரிக்க இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1910)
- 2005-ரேலங்கி செல்வராஜா, இலங்கையின் தமிழ் தொலைக்காட்சி அறிவிப்பாளர் (பி. 1960)

### சிறப்பு நாள்

- சர்வதேச இளைஞர் தினம்

**1985- ஈழத் தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் 2ம் கட்ட திம்புப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின.**



PUPLIC LIBRARY
JAFFNA.



# பேஸ்புக், ஓர்குட் பாதுகாப்பாக இயக்குவது எப்படி?

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

உங்கள் ஒன்லைன் வங்கிக் கணக்கில் நீங்கள் மேற்கொள்ளும் பணப் பரிமாற்றங்கள் ஒன்லைன் ஷேர் டிரேடிங் நண்பர்களுக்கு அனுப்பும் மெயில்கள் டவுண்லோட் செய்யும் தகவல்கள் அனைத்தும் மூன்றாவது கண்களினால் கண்காணிக்கப்படும். சட்டென்று ஒரு குட்டி வைரஸ் சொப்ட்வெயரை உங்கள் கணனிக்குள் இறக்கி அதைச் சரி செய்ய இந்த லிங்கைக் க்ளிக் செய்யுங்கள். ஆடித் தள்ளுபடி ஓஃபர் 50 ரூபாய் மட்டுமே! என்று காசு கறப்பார்கள். அப்படியே தொட்டுத் தொடர்ந்து நமது எக்கவுண்ட்டை முடக்கி அதை விடுவிக்க பைசா கேட்பதில் தொடங்கி நமது கணனியை ஹேக் செய்வது வரை வலை விரிப்பார்கள்.

ஆனால் நம்மையும் அறியாமல் அவர்களுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் நாமே உள்ளிட்டுக் கொண்டு இருப்போம். இது போக நாம் அப்லோட் செய்யும் போட்டோக்களுக்கும் வரும் சகிக்க முடியாத கமென்ட்கள் ஏற்படுத்தும் மன உளைச்சல் நமது பேர்சனல் விடயங்களைப் பற்றிய விவாதங்களின் போது எழும் கோபதாபங்கள் என நம்மை மனரீதியாக முடக்கும் சிக்கல்கள் பட்டியலுக்குள் அடங்காது.

பலருக்குத் தமது அடையாளத்தை வெளிப்படுத்திக் கொள்ளாமல் பொய்யான தகவல்கள் மற்றும் புகைப்படங்களுடன் பிறரின் ஓர்குட் ஃபேஸ்புக் பக்கங்களை மேயும் 54 சதவிகித பதின்பருவ வயதினர் "ஆபத்தான இணையப் போக்கு" எனும் மனச் சிக்கலில் மாட்டிக் கொள்கிறார்கள். நீங்கள் நண்பர்களுடன் பார்ட்டிகளில் லூட்டி அடித்துக் கொண்டு இருந்த படங்களை சும்மா ஜாலிக்கு என்று அப்லோட் செய்வது எதிர்காலத்தில் என்ன மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தும் என்று யாராலுமே கணிக்க முடியாது.


பெர்சனல் பிரச்சினைகள் மட்டுமல்லாமல், டெக்னிக்கலாகவும் உங்களின் கணனியைத் தாக்க முடிகிற பல்வேறு மால்வேர்கள், வைரஸ்களை அனுப்பிக் கொண்டே இருப்பார்கள். உங்கள் வங்கியின் வெப் பக்கத்தைப் போலவே போலியாக ஒரு வெப் பக்கத்தை உருவாக்கி, உங்களின் எக்கவுண்ட்டில் இருந்து பணத்தை கவர்வது போலவே, உங்கள் நண்பரின் ஓர்குட் பக்கத்தைப் போலப் பொய்யாக ஒன்றை உருவாக்கி, உங்கள் அந்தரங்கங்களைச் சுடுவதற்கு URL Spoofing என்று பெயர். உங்களைப் பற்றிய தவறான, நெகட்டிவ்வான செய்திகளைப் பரப்புவது, உங்கள் அனுமதி இல்லாமல் உங்கள் எக்கவுண்ட்டில் நுழைந்து தகவல்களை மேய்வது, போட்டோக்களை டவுண்லோட் செய்வது, வீடியோக்களை மற்றவருக்கு உங்கள் ஃபேஸ்புக் பக்கத்தில் இருந்து அனுப்புவது போன்றவை Cyberastalking வகை. உங்கள் வலைப் பக்கத்தை ஹேக் செய்து அதில் சில வைரஸ்களை லோட்செய்துவிட்டால், பின்பு நீங்கள் ஒவ்வொரு முறை உங்கள் நட்பு வட்டத்துக்குள் செல்கையில் அவர்களின் ஓர்குட் அல்லது ஃபேஸ்புக் பக்கத்திலும் இந்த வைரஸ்கள் குடிபெயர்ந்து பரவும்.

முன்னர்தான் இணையம் என்பது அனைவ்ராலும் எளிதில் எட்ட முடியாத சங்கதியாக இருந்தது.ஆனால், இன்று செல்போன் இல்லாதவர்கள் கூட தினமும் இணையத்தை மேய்வதை வழக்கமாக வைத்திருக்கிறார்கள். மின்சாரக் கட்டணம் செலுத்த, அப்ளிகேஷன் டவுண்லோட் செய்ய, பங்குப் பரிவர்த்தனைகளில் ஈடுபட எனப் பல்வேறு நடைமுறைகளுக்காக எல்லா வயதினரும் இணையத்தோடு தங்களை இணைத்துக்கொண்டே ஆக வேண்டியிருக்கிறது.

இப்போதெல்லாம் திருமண வயதில் இருப்பவர்கள் தங்களுக்கு நிச்சயமாக பெண் அல்லது பையனின் பெயரை கூகுள் தேடுதல் இயந்திரத்தில் டைப் செய்தால், அவர்களைப் பற்றிய முழுத் தகவல்களையும் போட்டோக்களுடன் கொட்டிவிடும். நனைந்த டவுசருடன் நண்பர்களுடன் நீச்சல் குளத்தில் போட்ட ஆட்டம், தோழிகளுக்கு மத்தியில் கேக் அப்பிய முகத்துடன்; நீங்கள் இருக்கும் கோலம் என நீங்கள் நினைத்தே பார்த்திராத தகவல் மழைகொட்டும்.

புகைப்படம் எடுக்கப்பட்ட சூழல் பற்றித் தெரியாதவர்களுக்கு உங்கள் மீதான முதல் பிம்பம் என்னவாக இருக்கும்? ஒரு வரித் தகவல், ஒரு போட்டோ உங்கள் எதிர்காலத்தையே காலி செய்துவிடும்.

சிம்பிளாக ஒரே விடயம் தான்... சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும்போது Rather Safe than Sorry என்பதை மட்டும் மனதில் வைத்து செயல்படுங்கள். ஓல் தி பெஸ்ட்!



**பாதுகாப்புக்கு சிலவழிமுறைகள்**

ஃபேஸ்புக், ஓர்குட் போன்ற சோஷியல் நெட்வேர்க்கிங் சைட்களில் வலைப் பதிவு செய்யும் விருப்பம் இருந்தால், Professional மற்றும் Personal சமாச் சாரங் களை தனியாகப் பிரித்து எடுத்து விடுங்கள். ஒவ்வொருவரும் பொதுவான வலைத்தளம் ஒன்றும் விரும்பம் சார்ந்த ஒன்றும் பயன்படுத்துவது நல்லது. Professional வலைப்பதிவுத் தளத்தை அனைவரும் பார்க்கும்படியும் Personal வலைத் தளத்தை உங்கள் நட்பு வட்டாரம் மட்டும் பார்க்கும்படி பிரைவஸியை அமைத்துக்கொள்ளுங்கள்.

(தகவல்கள் வளரும்)




# கணனிக்குப் புதியவரா ?
# மொனிட்டர் பிரச்சினை


கணனி சரியாக இயங்கினாலும், மொனிட்டர் தகராறு செய்தால் நம் கதி அதோகதிதான்.அவசரமாகப் பணியாற்ற வேண்டும் என எண்ணுகையில் மொனிட்டரில் பிரச்சினை ஏற்பட்டால் நமக்கு எரிச்சல் ஏற்படுவதுடன், பொறுமையிழந்து என்ன செய்வது எனத் தெரியாமல் பதற்றமடைவோம்.

மற்ற துணைசாதனங்களில் பழுது ஏற்பட்டால் அவற்றிக்குப் பதிலாக இன்னொரு சாதனத்தைப் புதிதாகவோ அல்லது கடனாகவோ பெற்று அப்போதைக்கு நம் கணனி பணியை முடிக்கலாம். மவுஸ், கீபோர்ட், ஸ்பீக்கர், ஏன் சிடி மற்றும் பிளப்பி டிரைவ் கூட மேலதிகமாக வைத்துக் கொண்டு பயன்படுத்தலாம். அல்லது பழைய கணனியிலிருந்து கழற்றி வைத்ததைத் கொண்டு இயங்கலாம். ஆனால் மொனிட்டரில் பிரச்சினை ஏற்பட்டால் அது இயலாது.

மேலதிகமாக ஒன்று வைத்துக் கொள்ள முடியாது. ஏனென்றால் இடம், விலை நமக்குக் கட்டுப்படியாகாது. மற்றவரிடமிருந்து இரவல் வாங்குவதிலும் சிக்கல் ஏற்படும்.எனவே மொனிட்டரில் பிரச்சினை ஏற்பட்டால் அதனைப் பொறுமையாக என்ன பிரச்சினை என அலசிப் பார்ப்பதே சிறந்தது. அதற்கான சில வழிகளை இங்கு பார்ப்போம்.

உங்கள் கணனி நன்றாக இயங்கி மொனிட்டரில் எந்த சிக்னலும் வரவில்லை என்றால் கீழ்க்கண்டபடி அதனை ஆய்வு செய்யவும். ஆனால் அதில் எங்கு பிரச்சினை என்று உங்களுக்குச் சரியாகத் தெரியும் என்றால் நேராக அதனைச் சரி செய்திடும் வழிக்கே சென்று விடலாம்.

◆ முதலில் மொனிட்டருக்குச் செல்லும் மின்சாரம் இயக்கப்பட்டிருக்கிறதாக என்று பார்க்கவும். மிகவும் பழைய கணனி மற்றும் மொனிட்டராக இருந்தால் கணனியின்



சிபியூவில் இருந்தே மொனிட்டருக்கு பவர் கேபிள் செல்லும். இது சரியாகப் பொருந்தி உள்ளதா என்று பார்க்க வேண்டும். எதற்கும் ஒருமுறை எடுத்து மீண்டும் சரியாகப் பொருத்திப் பார்ப்பதே நல்லது. தற்போதைய மொனிட்டர் எனில், அதற்கு தனியே பவர் லைன் பிளக் கார்ட் இருக்கும். அது சரியான படி பவர் பிளக் சொக்கெட்டில் பொருத்தப்பட்டிருக்கிறதா எனப் பார்க்கவும். அந்த பிளக்கிற்குத் தனியான ஸ்விட்ச் இருந்தால் அது ஓன் செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்க்கவும். மொனிட்டருக்கு மின்சாரம் செல்கிறது. அது ஓன் செய்யப்பட்டிருக்கிறது என்பதனை அறிந்து கொள்ள ஒரு சிறிய எல்.இ.டி.லைட் இருக்கும்.

இது மெலிதான ஓரஞ்ச் நிறத்தில் இருந்தால் மொனிட்டருக்கு மின்சாரம் செல்கிறது. ஆனால் கணனியின் சிபியூவிலிருந்து சிக்னல் வரவில்லை என்று பொருள்.

◆ அடுத்ததாக உங்கள் மொனிட்டரில் டிவியில் பிரைட்னஸ் மற்றும் கொண்ட்ராஸ்ட் அட்ஜஸ்ட் செய்வதற்கான ஸ்விட்ச் கண்ட்ரோல் கொடுத்திருப்பார்கள். இதனை அட்ஜஸ்ட் செய்து பார்க்கவும்.

சிலவேளைகளில் நாம் இல்லாதபோது குழந்தைகள் இந்த கொண்ட்ரோல் ஸ்விட்சுகளை அழுத்தி மாற்றி வைத்திருப்பார்கள். எனவே இவற்றை அட்ஜஸ்ட் செய்தால் மொனிட்டர் சரியாகலாம்.

◆ அடுத்ததாக மொனிட்டருக்கு வரும் வீடியோ கேபிளைச் சரி செய்து பார்க்கவும். அது சரியான முறையில் பொருத்தப்பட்டிருக்கிறதா எனப் பார்த்து மீண்டும் ஒரு முறை கழற்றி மாற்றவும்.


◆ முடியுமென்றால், சந்தேகத்திற்குரிய மொனிட்டரை இன்னொரு கணனியில் பொருத்திப் பார்க்கவும். அப்படியும் மொனிட் டர் வேலை செய்திடவில்லை என்றால் மொனிட்ரில் தான் கோளாறு இருக்கிறது என்பது உறுதியாகிறது.கணனியில் பிரச்சினை இல்லை என்றும் தெரிகிறது. இந்நிலையில் உங்கள் மொனிட்டருக்குப் பதிலாகப் புதிய மொனிட்டர் வாங்கிப் பொருத்தவேண்டும். அல்லது நல்ல டெக்னீஷியனாகப் பார்த்து மொனிட்டரை ரிப்பேர் செய்திடவேண்டும்.

◆ இன்னும் சில வழிகளில் மொனிட்டர் இயங்காமல் காட்சியளிக்கும். கணனி பூட் ஆகும்போதும் பின்னர் காட்சி கிடைக்கும் போதும் தெளிவான காட்சி இல்லாமல் கன்னாபின்னா என்று தெரியும்.


இப்படிக் குழப்பமான காட்சி இருந்தால் உங்களுடைய டிஸ்பிளே கார்ட் சரியில்லை ஏன்று பொருள். இதனை மற்றிப் பாருங்கள்.மாற்றப்பட்ட கார்ட்டுடன் காட்சி தெளிவாக இருந்தால் பழைய டிஸ்பிளே கார்ட் பழுதாகிவிட்டது என்று பொருள் அதனை அப்படியே தூக்கி எறிய வேண்டியதுதான். புதிய டிஸ்பிளே கார்ட்டுக்கும் மொனிட்டர் சரிப்பட்டு வரவில்லை என்றால் மொனிட்டரை மாற்றுங்கள். அல்லது ரிப்பேர் செய்திடுங்கள். புதியது வாங்குவது என முடிவு எடுத்துவிட்டால் செகண்ட் ஹாண்ட் மொனிட்டரை வாங்கவேண்டாம்.

அதேபோல் புதிய மொனிட்டரை வாங்குகையில் அன்றைய நிலையில் அறிமுகமாகி உள்ள தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான மொனிட்டரை வாங்குங்கள் எடுத்துக்காட்டாக தற்போது தட்டையான எல்.சி.டி. மொனிட்டர்கள் குறைவான விலையில் கிடைக்கின்றன. அவற்றில் ஒன்றை வாங்கவும்.

# அமைச்சர் 24ஆம் புலிகேசி மேர்வின் சில்வா



தான் ஏற்பாடு செய்த நிகழ்வுக்கு வருகை தராத ஓர் அரசாங்க அதி காரியை, இம்சை அரசன் 23 ஆம் புலிகேசியின் பாணியில் மாமரத்தில் கட்டி வைத்து தண்டனை வழங்கியதன் மூலம் புதிய



மரத்தில் கட்டி வைக்கப்பட்ட ஊழியர்...

சிக்கி இருக்கிறார் இலங்கையின் பெருந்தெருக்கள் துறை பிரதியமைச்சர் மேர்வின் சில்வா. உண்மையில், இந்த இம்சையாரின் கீர்த்திப் பட்டியல் ரொம்ப நீளம்...!

## அதிரடி நடவடிக்கையில் அசத்தல் புரிவதில் விண்ணன்

மேர்வின், சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் அரசியலுக்குள் நுழைந்தவர். அவருக்குப் பின்னால் மஹிந்த ராஜபக்ஷவையும் காக்கா பிடித்து அமைச்சராக வலம் வருபவர் என்ற முன்னுரையுடன் அவரை கடுப்புடன் இரசிப்போம்!

ஒரு நைட்கிளப்பில் மேர்வினின் மகன் மாலக சில்வா குடித்துவிட்டுத் தகராறு செய்ய... நைட்கிளப் உரிமையாளர்கள் மகனைத் தூக்கி வெளியே கடாசினர். உடனடியாகத் தனது குண்டர் படையுடன் அங்கு வந்த மேர்வின் சில்வா, நைட்கிளப்பை அடித்து நொறுக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டு அந்தப் பகுதியையே அதகளப்படுத்திவிட்டுச் சென்றார். அவர் சென்ற பிறகு வந்த காவல் துறை,வெடித்துச் சிதறியிருந்த தோட்டாக்களை பொறுக்கியதுதான் மிச்சம். மேர்வினை அசைக்க முடியவில்லை!

ஒரு பொதுக்கூட்டத்தில் தான் உரையாற்றிய காட்சியை ஒளிபரப்பவில்லை என்பதால், இலங்கை அரசுக்குச் சொந்தமான ரூபவாஹினி தொலைக்காட்சி நிலையத்துக்குள்ளேயே நுழைந்தார் அமைச்சர். அங்கு இருந்த செய்தி ஆசிரியரைத் தாக்கத் தொடங்க... கடுப்பான ஊழியர்கள், அமைச்சரை ஓர் அறைக்குள் வைத்துப் பூட்டி நையப்புடைத்தனர். மன்னிப்புக் கேட்கும் வரை அவரை வெளியே விடமுடியாது என்று கூறிவிட்டனர். இந்த களேபரக் காட்சிகள் இலங்கைத் தொலைக்காட்சிகளில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன! இறுதியாக ஆயுதப்படையினர் வந்து அமைச்சரை அங்கிருந்து மீட்டுச் செல்ல வேண்டியதாயிற்று.

எப்போதும் மேர்வினுக்கு ஊடகவியலாளர்களைக் கண்டால் ஆகாது. கண்ணாடி பார்த்த குரங்குபோல் ஆகிவிடுவார். திடீரென்று பாய்ந்து சென்று கேமராக்களைப் பறிப்பது ஊடகவியலாளரை அடிப்பது என்று இவரது சேட்டைகளுக்குக் குறைவில்லை. ஆனால் ராஜபக்ஷ வின் டேஸ்டே வேறு அல்லவா...? தன் அரசு இரண்டாவது தடவையாகப் பதவியேற்றதும் இந்த 'பராக்கிரமசாலி' யைத்தான் ஊடகத் துறை அமைச்சராக நியமித்தார் மஹிந்தா. தனது ஊரான களனியில் திடீரென்று அனைத்து மதுபானச் சாலைகளையும் மூட வேண்டும் என்று உத்தரவு போட்டார் மேர்வின். ஏதோ சட்ட விரோதமாக இயங்குகிற மதுபான சாலைகளைத்தான் மூடச்



சொல்கிறார் என்று நினைத்தால்.. ஒட்டுமொத்தமாக மது விற்பனையையே தன் பிரதேசத்தில் தடை செய்வதாக அறிவித்தார். எதிர்த்தவர்களை தன் குண்டர்களை விட்டுத் தாக்கினார்.

இவரிடம் யாராவது, 'ஏன் இப்படி நடந்து கொள்றீர்கள்?' என்று கேள்வி கேட்டால் என்தலைவன் மஹிந்தா சொன்னால் மட்டும் தான் நிறுத்துவேன்... இல்லை என்றால் என்னை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்று வசனம் பேசுவார்.

அண்மையில் இலங்கையின் பிரபலமான ஆடை விற்பனை நிலையம் ஒன்றுக்குள் நுழைந்த மேர்வின் சில்வா அதிரடியாக விற்பனை நிலையத்தின் கதவுகளை இழுத்துச் சாத்தினார். உள்ளே இருந்த வாடிக்கையாளர்கள் என்ன நடக்கிறது என்று திகைத்து நிற்க ... அவர்களிடம், 'உங்களுக்கு என்னவெல்லாம் தேவையோ வாங்கிக் கொள்ளுங்கள். ஆனால் பில்லை நான் தான் கொடுப்பேன்' என்று அடம்பிடித்து அன்றைக்கு வாடிக்கையாளர்களின் ரசீதுகளுக்கு எல்லாம் அவரே பணம் கொடுத்தார். 'என்ன தான் ஆச்சு?' என்று ஊடகவியலாளர்கள் கேட்க... 'இன்று என் அம்மாவின் பிறந்த நாள். அதனால் உடைகளை தானமாகக் கொடுத்தேன்' என்று சிரித்தார்.

இப்படி எல்லாம் காமெடியாக இருக்கிற தங்கள் அமைச்சரை, காசில்லாத பொழுது போக்கு சாதனமாகவே நினைத்துக் கலாய்த்துத் திளைக்கின்றனர் சிங்கள இளைஞர்கள். சர்தார்ஜி ஜோக்குகளைப்போல் சிங்களத்தில் மேர்வின் சில்வா ஜோக்குகள் கொட்டிக்கிடக்கின்றன. 'மேர்வின் சில்வாவின் புதிய அதிரடி!' என்று வீடியோ கிளிப்பிங்குகள் நிறைகிறது இணையமெங்கும் ஆனால், எதனாலும் மேர்வினின் அதிரடிகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஒரு நாடக நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக இவரை அழைப்பதற்காக நிகழ்ச்சியின் அமைப்பாளர் இவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். மேர்வினோ அதிரடியாக, 'நான் நாடகத்தில் நடிப்பேன். எனக்கும் ஒரு பாத்திரம் தரத்தான் வேண்டும்' என்று அடம்பிடித்திருக்கிறார். கடுப்பான நாடக அமைப்பாளர், 'எங்கள் நாடகத்தில் ஒரு குரங்கு வருகிறது. அதற்கு மனைவியாக நடிக்கி றீர்களா?' எனக் கேட்க... இந்த நக்கலில் கொதிப்படைந்த மேர்வின், தனக்குத் தெரிந்த கெட்டவார்த்தைகளை எல்லாம் விடாமல் வரிசையாக ஒப்பித்தாராம். அந்த தொலைபேசி உரையாடல் எப்படியோ ஒலிப்பதிவு ஆகிவிட... அதையே ரிங்டோனாக மாற்றி உலவவிட்டார்கள் சிலர். காது கூசும் அமைச்சரின் அர்ச்சனை சிங்கள இளசுகளின் ஹாட் ஹிட் ரிங்டோனாக மாறியது.

நாடாளுமன்றத்திலேயே பகிரங்கமாகக் கெட்டவார்த்தையில் திட்டுவாராம் மேர்வின் தான் அமைச்சராக இருக்கும் பெருந்தெருக்கள் துறை பற்றி யாராவது கேள்வி கேட்டால், 'மஹிந்த ராஜபக்ஷ சிறந்த தலைவர். அவரை மிஞ்ச இந்த உலகத்தில் ஆள் கிடையாது' என்று சம்பந்தமில்லாமல் அதிபரைப் புகழ்ந்து விட்டு அமர்வார். இதை யாராவது கண்டித்தால்,உடனடியாக கடுப்பாகி,'நீ ஒரு மதிகெட்ட குரங்கு' என்று கேள்வி கேட்டவரை திட்டுவார். சபாநாயகருக்கு மேர்வின் சில்வாவின் வார்த்தைகளை தணிக்கை செய்வதே தனிப்பணியாம்!

கடைசியாக போன வாரம் நடந்ததுதான் இந்தச் சம்பவம்...டெங்கு நோய் தடுப்பு பற்றிய விழிப்புணர்வு செயலமர்வுக்கு,குறிப்பிட்ட அந்த ஊழியரால் வரமுடியவில்லை. தனது பிள்ளைக்கு உடல் நலம் இல்லை என்று அந்த ஊழியர் காரணம் சொன்னார்.ஆனால் மேர்வின் ஏற்கவில்லை. அந்த ஊழியரை மரத்தில் கட்டச்சொன்னார். இதை மீடியாக்கள் சுற்றியிருந்து படம் பிடித்தார்கள். மாமரத்தில் கட்டி வைத்து புலிகேசி பாணியில் வித்தியாசமாக தண்டனை அளித்து மகிழ்ந்தார் அமைச்சர் . இது ஊடகங்களில் பளிச்சிட, கொதித் தெழுந்த ஊழியர்கள் அமைச்சருக்கு எதிராகப் போராட்டங்கள் நிகழ்த்தினர். ஆனாலும்,சளைக்காத மேர்வின் சில்வா, 'அந்த ஊழியரை தான் கட்டி வைக்கவில்லை' என்றும் அவர் தன்னைத்தானே கட்டிக் கொண்டதாகவும் வினோதபதிலளித் தார். இது எப்படி இருக்கு?

இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது அண்மையில் மேர்வின் சில்வா பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய பேச்சு. 'பத்திரி கையாளர் லசந்தவை கொலை செய்தது நாங்கள் தான். அதைப் போல உங்களையும் செய்வேன். உயிர் பிழைக்க வேண்டுமானால் வாயை மூடிக்கொண்டு இருங்கள்' என்று பகிரங்கமாக

**ஜூனியர் விகடன்**

கொச்சையான மொழியில் சவால் விட்டிருக்கிறார் இந்தக்காமடி -கம் -குரூர அமைச்சர்!

மக்கள் அவ்வழி என்பார்கள்? அமைச்சர்களும் அந்த வழிதானோ?!

ஒருவன் கடவுளை நோக்கி நொண்டிச் செல்கின்றான். ஒருவன் சாத்தானை நோக்கிக் குதித்தோடுகிறான். ~ டென்மார்க்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழ் இளைஞர்களிடம் ஓர் அன்பு வேண்டுகோள்

அன்புசால் இளைஞர்களுக்கு!

அவசரமாக இக் கடிதத்தை எழுத வேண்டிய கட்டாயம். தமிழினம் படும் துயர்பற்றி எழுதுவதாக நீங்கள் நினைக்கலாம்.

அதுபற்றி எல்லாம் எழுத விருப்பவில்லை. எழுதாக் குறைக்கு அழுதால் தீருமா என்ன? எல்லாம் நடந்து முடியட்டும். நீதி, தர்மம், அறம் இருக்குமாயின்–இறைபரம்பொருள் உள்ளதாயின், இந்த மண்ணில் என்றோ ஒருநாள் தமிழ் மக்கள் உரிமை பெற்று பிரவாகம் அடைவர். அப்போது இதனைத் தடுப்பதற்கு யாராலும் முடியாமல் போகும்.

அவ்வாறில்லை தமிழ் மக்களாகிய நாம் துன்பத்தை மட்டுமே அனுபவிக்க வேண்டும் எனில், அது நம் தலைவிதி என்று நினைத்து விட வேண்டியதுதான்.

இவ்வாறு இருப்பது புத்திசாலித்தனமா? என்று நீங்கள் கேட்டால் மிகப் பெரும் விடுதலைப்புலிகள் அமைப்புக்குள்ளேயே காட்டிக் கொடுப்போர் இருந்தனர்.

அதுபோல தற்போதைய தமிழ் அரசியலுக்குள்ளும் எத்தனையோ விதமானவர்கள்.

தமிழினம் அழிவைச் சந்தித்தாலும் அது பற்றிக் கவலை கொள்ளாமல் தங்கள் சுய இலாபத்தை மட்டுமே கண்ணும் கருத்துமாகக் கொண்டிருக்கும் பிரகிருதிகள்.

நிலைமை இதுவாக இருக்கும்போது தமிழினத்தை மீட்டெடுப்பது எங்ஙனம்? ஆகையால் எல்லாம் நம் தலைவிதி என்று நினைப்பதை விட வேறு வழியேதும் இருக்கிறதா?

உலக நாடுகள் உதவும் என நினைத்து நினைத்து ஏமாந்து அழிந்து போனதைத் தவிர வேறு எதனைக் கண்டோம்?

ஆக, சொந்தக் காலில் நிற்போம். நாமே எங்கள் சுதந்திரத்திற்கும் பொறுப்பென்பதை உணர்வோம். எனினும் எங்கள் அரசியல் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பதற்கு முன்னதாக, தமிழ் இளைஞர்களின் எதிர்காலம் பற்றி ஒரு கணம் சிந்திப்பதே சாலச் சிறப்புடையதாகும்.

அன்புக்குரிய இளைஞர்களே! நாங்கள் முதலில் எங்களை அறிய வேண்டும். சந்தியில் நிற்பதும், மது அருந்துவதும், கையடக்கத் தொலைபேசியும்தான் எங்கள் சீவியம் என்றால் இந்த மண்ணில் நிகழ்ந்த தியாகங்களுக்கு எந்த அர்த்தமும் இல்லாமல் போகும்.

தென்பகுதி இளைஞர்களை ஒருகணம் பாருங்கள். யாழ்ப்பாணத்தில் பொருளாதாரத்தை ஈட்டுவதில் அவர்கள் காட்டும் அக்கறை, எத்தனை வடிவங்களில் அவர்கள் நம் மண்ணுக்கு வந்து எங்கள் நிதித் தேட்டத்தை அள்ளிச் செல்கின்றனர்.

ஆனால் நாங்களோ! எதுபற்றியும் கவலையற்றவர்களாக, மோட்டார் சைக்கிளில் ஓடுவதும் கையடக்கத் தொலைபேசியில் உரையாடுவதும்...! எப்படி எங்கள் எதிர்காலம் அமையும்.

• அன்புசால் இளைஞர்களே! உங்கள் கைகளில்தான் தமிழினத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது. சுவாமி விவேகானந்தர் காட்டிய இளைஞர்களாக நீங்கள் மாற வேண்டும்.

அரசியலின் வகைமையைத் தீர்மானிக்க வேண்டும். அறிக்கை விடும் கோமாளிகளாக எங்கள் அரசியல் இருப்பதை மாற்றி ஆக்கபூர்வமான செயற்பாட்டை அமுல்படுத்தும் அரசியல் கலாசாரத்தைத் தமிழனத்தில் உருவாக்க வேண்டும்.

வாருங்கள் என்னருமை இளைஞர்களே! அகிம்சைப் பாதையில் அறிவெனும் ஆயுதத்தோடு அரசியல் களத்தில் குதியுங்கள் எங்கள் உரிமையைப் பெற்றுக் கொள்ள.

# தெல்லிநகரில் அருளாட்சி புரியும் துர்க்கையம்மனைப் போற்றுவோம்

## இன்று கொடியேற்றம் காணும் தொல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன்

அகில உலக நாயகியாக விளங்கி தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் திருவருள் பாலித்து அருளுகின்றாள். துர்க்கை அம்மன் சங்கு சக்கரம் ஏந்திய கரங்களுடன் கிழக்கு முகமாக நோக்கி அமர்ந்துள்ளமை பெருஞ் சிறப்பைத் தருகின்றது.

உற்சவம் என்ற சொல் பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றான சிருஷ்டியைக்குறிக்கின்றது. உற்சவங்கள் ஆறுவகைப் படுமென சைவ ஆகமங்கள் கூறுகின்றன. மேலும் உற்சவம் நித்தியம், நைமித்தியம், காமிகம் என மூன்று வகையாக வகுக்கப்பட்டுள்ளன.

கொடியேற்றிய பின் நடைபெறும் பிரமோற்சவம் நைமித்திய உற்சவங்களி லெல்லாம் தலை சிறந்தது. தெல்லிப்பளை துர்க்கை, யம்மன் கோயில் மஹோற்சவம் 1968 ஆம் ஆண்டு முதல் கொடியேற்றம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் மஹோற்சவம் ஆகை யால் பெருந் திருவிழாவாக போற்றப்படுவதுடன் நாட்டின் நாலா புறத்தில் இருந்து கூடும் அடியார் கூட்டமோ அளவிட முடியாதது. அடியார்களின் வருகையால் பெருமை பெற்றது தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம்.

கொடியேற்றத்தின் போது கொடிச்சீலையில் துர்க்கையம்மனின் அடையாளங்களும் கண்ணாடி , பூரணகும்பம் முதலிய அஷ்டமங்கலப் பொருட்களும் காணப்படுவது அவதானிக்கலாம். கொடியேற்றல் காலத்தில் யாகபூசை அமைப்பை உருவாக்கிய பெருமை அச்சுவேலி சிவ ஸ்ரீ. ச.குமாரசாமி குருக்களையே சாரும்.

முதல் மூன்று நாட்களும் விநாயகருக்கும் தொடர்ந்து வரும் ஒன்பது நாட்களும் துர்க்கை அம்பாளுக்கும் யாக பூசைகள் நடைபெற்று வருகின்றன. அடியார்களை உயர்பதம் அடையச் செய்வதற்காக கொடியேற்ற நாள் முக்கியத்துவம் பெறுகின்றது. துர்க்கையம்மனின் தேர் உற்சவம் ஆவணி உத்தராட நட்சத்திரத்தில் நடைபெறுகின்றது. தீர்த்த உற்சவம் ஆவணி ஓணத்தில் அன்று துர்க்கா புஷ்கரணி தீர்த்த தடாகத்தில் நடைபெற்று வருகின்றது.

பாண்டிய மன்னர்களால் மதுரையும், சோழ மன்னரால் சிதம்பரமும் பல்லவர் மன்னர்களால் காஞ்சியும் சிறப்புப் பெற்றது. இதேபோன்று அருள்மிகு துர்க்கை அம்பாள் ஆலயமும் சிவத்தமிழ்ச் செல்வி அம்மாவின் வியத்தகு பெரும் பணிகளால் இன்றைய எழுச்சிப் பெரு நிலையாலும் சிறப்புப் பெற்றது.

அம்மையாரின் தர்மகர்த்தாசபை தலைமைப் பணியையும், நிர் வாக சபை தலைமைப் பணியையும் இன்றும், நாடும், ஏடும் போற்றத் தவறவில்லை. துர்க்கை அம்மன் வரலாற்றில் ஒரு எழுச்சிப் பெருமையை உருவாக்கி ஒளிமயமான எதிர்காலத் தை தடம் அமைத்து, தளம் பதித்து வைத்தவர் இவரே. இதனா லேயே இன்றைய தலைவர் ஐயா அவர்களுக்கும் உறு துணையாகவே உள்ளது. துர்க்கையம்மன் கோயில் சமூகப்பணிகளால் மிகச் சிறப்பைக் கண்டு உயர்ந்தது. துர்க்காபுரம் மகளிர் இல்லப்பணியே இதற்கு மூலவேராக அமைந்தது. இதனால் மேற்குலக நாடுகளில் வாழும் அடியார்கள் இன்றும் ஆலய பணிகளுக்கும், சமூக பணிகளுக்கும் பணத்தை அள்ளி அள்ளி வழங்குகின்றார்கள் என்பதனால் பெருமை அடைகின்றோம்.

எனவே அழகுக்கு ஒருவ ரும் ஒவ்வாத வல்லியும் ஆகிய மகா சக்தி வாய்ந்த துர்க்கை அம்பாளை இம்மஹோற்சவ காலங்களில் வழிபாடு செய்து உய்தி பெறுவோமாக.

கா.சிவபாலன்.

சமுர்த்தி அதிகார சபையினால்

# தெரிவு செய்யப்பட்ட 3060 கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது

(கொழும்பு)

இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 3ஆயிரத்து 60 கிராமங்களை அபிவிருத்தி செய்யும் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதுகுறித்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பந்துல திலக ஸ்ரீ தகவல் தருகையில், இந்த ஆண்டில் அமுல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 3ஆயிரத்து 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சமுர்த்தி உதவி பெறுபவர்களின் ஜீவனோபயத்தை அபிவிருத்தி செய்யவும் சமூக ஆன்மீக அபிவிருத்தியை மேற்கொள்ளவும் முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது.

அத்துடன் குறைந்த வருமானம் பெறுபவர்களினை சுயதொழில்வேலை வாய்ப்பில் ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.மேலும் நாடெங்கிலும் செயற்படும் ஆயிரத்து 42 சமுர்த்தி வங்கி சங்கங்கள் மூலம் கடன் உதவிகள் வழங்கப்படுவதுடன், இதற்கு ஒரு இலட்சம் ரூபா வரையிலான கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(6-4)

# டயலொக் நிறுவனத்தின் பெயர் மாற்றம்

டயலொக் ரெலிக்கொம் (Dialog Telekom PLC) நிறுவனத்தின் பெயர் டய லொக்அக்ஸ்ரா (Dialog Axiata PLC) என பெயர் மாற்றப் பட்டுள்ளது. கடந்த மாதம் 7 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இப்பெயர் மாற்றம் இடம் பெறுவதாக அதன் பொது முகாமையாளர் அப்சரா விஜயவர்த்தன தெரிவித்தார். (ச-5)

# உடுப்பிட்டியில் டெங்கு நோய்க்கு இலக்கான இருவர் இனங்காணப்பட்டனர்

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி பகுதியில் கடந்த சில நாட்களாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இப்பகுதியில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட இரு நோயாளிகள் இனம் காணப்பட்டதையடுத்து இந்நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கரவெட்டி சுகாதார சேவை உத்தி யோகத்தரின் பணிப்புக்கமைய உடுப்பிட்டி பகுதியில் தொடர்ந்து இந் நோயைக் கட்டுப்படுத்தும் வகையில், மருந்துகள் விசிறப் பட்டு வருகிறது.

எனினும் டெங்கு நுளம்பின் தாக்கம் அப்பகுதியில் இருக்கலாமென்ற அச்சத்தினால் டெங்கு நோய் ஒழிப்பு நட வடிக்கை தொடர்கிறது. (6-2-10)

இன்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் கொடியேற்றம்

## ஏற்றுவோர் துயர் தீர்க்க ஏற்றுந்தன் கொடியை

பங்கயத் தாள் நோவ பகலிரவாய் நின்று
பரவுவோர்க்கு நல்லருள் புரியும் தாயே!
மங்கையர் உனை வேண்டித் துதித்திட
மனையெலாம் சிறந்திட அருள்பவளே!
சிங்கத்தின் மீதமர்ந்து தேசத்தில் நீவந்து
தீமைகள் அனைத்தையும் கொய்தே
எங்களின் தேசத்தில் அருள் செய்திட
எழிலான துர்க்கையே ஏற்றுந்தன் கொடியை

மதுரகவி எம்.அருளானந்தன்

# நல்லெண்ணத்தின் மூலமே இறைவனைக் காண முடியும் பாபா

அமைதி உங்களுடைய மனதினுள்ளேயே இருக்கிறது வெளி உலகில் அமைதியினைத் தேடுவதில் பயனில்லை. அதனைப் போலவே சத்தியமும் அன்பும் ஒருவருடைய மனதில் தான் காணப்படுகின்றன. அன்பினை வளர்த்துக் கொள்ளும் போது இவ்வுலகில் எதனையும் நாம் சாதிக்க முனையலாம். பகவான் சாயி அன்பேயுருவானவர் அன்பே எனது சொத்து ; அதனை அனைத்து ஜீவராசிகளுடனும் பகிர்வதே எனது கடமை என்கிறார் பாபா . அத்தகைய அன்பை உண்மையான உணர்வுடன் பயன்டுத்திக் கொண்டால் மட்டுமே அவர்பால் நாமும் நாடமுடிகிறது.

சுவாமியின் அன்புதவிர எமைக் காக்கும் நற்கவசம் வேறெதுவுமில்லை. இவ் ஆத்மார்ந்த தத்துவத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அனைவரும் சகோதார சகோரதர்களே! ஆனால் சகோதர சகோதரிகளுக்கு இடையே கூட வேறுபாடுகள் தோன்றுகின்றது. ஆகவே ஒருவருக்கொருவர் அன்பினை வளர்த்துக் கொள்ளுங்கள் விளக்கெண்ணெய் முகத்தினை வைத்திராது என்னென்றும் உற்சாகமான மனோபாவத்துடன் இனிமையான முகத்துடன் திகழ்ந்திடுங்கள் என்கிறார் சாயி. அத்தகைய வாழ்வுதான் புனிதமானதாகவும் இலட்சியம் நிரம்பியதாகவும் இருக்கும்.



எம்மிடம் உற்சாகமும் மகிழ்ச்சியும் இல்லாமல் போவதற்கும் நாம் எதிலுமே குறைந்தவர்கள் அல்லர் ஏனெனில் பகவானின் அன்புடன் அருளும் எப்போதும் எம்முடன் உள்ளது. சிலரால் துன்பங்களை தாங்க இயலாது ஆனால் சிறிது பொறுமையினை அவர்கள் கடைப்பிடித்தாலும் அவர்கள் பட்ட அத்துன் பமும் வலியும் மிகப் பெரிய சந்தோஷத்தினைக் கொடுக்கக் கூடிய நிகழ்வாக மாறிவிடும் சிலநேரங்களில் எமது மனது எமக்கு எதிராகச் செயற்படுகின்றது. இவை எமது சுய எண்ணங்களின் பிரதிபலிப்பே நல்லது கெட்டது இரண்டும் எம்முள்ளேயே தவிர வெளியுலகில் இல்லை. பார்வை தீயதாக இருக்கையில் தீயதையும் நல்லதாக இருக்கையில் இறைவனேயே எங்கும் காண முடிகிறது. இவ்வாறான நல்லெண்ணத்தின் மூலமே எம்மால் சத்திய த்தையும் அனைபையும் உணரமுடிகிறது.

ஜெய்சாயிராம் யாதவன்

# வாகனம் செலுத்தத் தகுதியுடைய அங்கவீனமுற்றோரும் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள முடியும்

## யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள பரிசோதகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வாகனங்களை செலுத்தத் தகுதியுடைய அங்கவீன முற்றோர், அதற்கான தகுந்த ஆவணங்களை சமர்ப்பிக்குமிடத்து சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களப் பரி சோதகர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் வாகனத்தைச் செலுத்துவதற்கு தகுதியுடைய அங்கவீனமுற்றோர் நீண்ட காலமாக தமது தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ,பொருளாதார ரீதியில் முன்னேற முடியாமல் முடக்கப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் அங்கவீனமுற்றோருக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும் என அவர்கள் தொடர்பான சங்கங்களினால் கடந்த காலங்களில் வேண்டு கோள் விடுக்கப்பட்டிருந்தபோதிலும் உரிய தீர்வு எட்டப்படவில்லை.

தற்போது அங்கவீனமுற்றோருக்கான விசேட சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு இலங்கை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில்,ஒரு காலை இழந்து செயற்கைக்கால் இணைக்கப்பட்டவர்கள், கால்கள் இருந்தும் இயங்க முடியாதவர்கள் மற்றும் வாகனம் செலுத்தத் தகுதியுடைய ஏனைய அங்கவீனர்கள் சாரதி அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பிக்க முடியும்.

வாகனத்தின் பதிவுகள் யாவும் உரிய சாரதியின் பெயரில் அமைவதுடன் ,அங்கவீன முற்றோர் செலுத்தும் வாகனமாக,பதிவுப்புத்தகம் அமைதல் வேண்டும். அத்துடன் இவ் வாகனம் அவர்களது நிலைக்கு ஏற்ப (பிறேக்) மாதிரி வடிவமைக்கப் படவேண்டும்.

அத்துடன் அவர்கள் விசேட மருத்துவ சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இம் மருத்துவச் சான்றிதழ் யாழ். மாவட்ட மருத்துவ நிபுணர்களால் வழங்கப்படமாட் டாது.

மாறாக ,நுகேகொடை கொழும்பு-5 என்ற முகவரியில் உள்ள தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தில் (NTMI) மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

இம் மருத்துவச் சான்றிதழை பெறுவதற்கு மாதிரி வடிவமைக்கப்பட்ட வாகனத்தையும் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும்.

இந்நிலையில் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தில் உள்ள 4 பேர் கொண்ட வைத்திய நிபுணர் குழுவொன்று மருத்துவச் சான்றிதழுக்காக விண்ணப்பிக்கும் சாரதியின் உடல் நிலை தொடர்பாக பரிசோதிப்பார்கள்.

இதன் அடிப்படையில் மூன்றாவதாக பரிசோதிக்கும் வைத்திய நிபுணர் பிரதான சாரதியை வாகனத்தைச் செலுத்தும்படியும் , சாரதி ஆசனத்தில் அமர்ந்திருந்து சாரதி வாகனத்தை செலுத்தக்கூடிய செயற்பாடு தொடர்பாக அவதானித்தபின் சாரதி வாகனத்தை செலுத்தக்கூடிய உடல் நிலை தகுதியுள்ளவரா அல்லது இல்லையா என்பதை நான்காவது உயர் வைத்திய நிபுணரிடம் அறிக்கை சமர்ப்பிப்பார்.

இதன் பின் பிரதான சாரதி வாகனத்தை செலுத்தக்கூடிய தகுதியுடையவர் என்றால் இவரின் உடல் ரீதியான செயற்பாடுகள் தொடர்பாக மருத்துவ சான்றிதழில் எழுத்து மூலம் குறிப்பிட்டு வாகனத்தை செலுத்த தகுதி உடையவர் என்ற விசேட மருத்துவச் சான்றிதழை வழங்குவார். இம்மருத்துவச்சான் றிதழை ஒரே நாளில் பெற்றுக்கொள்ள முடியும்.

மருத்துவச் சான்றிதழுடனும் மாதிரி வடிவமைக்கப்பட்ட வாகனத்துடனும் கொழும்பு பிலியந்தலையில் உள்ள இலங்கை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தொழில்நுட்ப பிரிவில் மோட்டார் போக்கு வரத்து உதவி ஆணையாளர் இதனை பார்வையிட்டதன் பின்னர் அங்கவீனமுற்றவர் வாகனம் செலுத்தக்கூடிய வகையில் மாதிரி வடிவமைக்கப்பட்ட வாகனத்தைச் (பிறேக்) செலுத்தி அவர் வாகனம் செலுத்தக்கூடியவர் என இனங்காணப்படுமிடத்து அவருக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்க முடியும் என உறுதிப்படுத்தி ஆவணத்ந்த சமர்ப்பிப்பார்.

இதன் பின்னரே யாழ்.மாவட்டத்தில் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரிக்கு எழுத்துப்பரீட்சை நடத்தப்பட்டு இதில் சித்தியடைந்தபின் செயல்முறைக்கான பரீட்சை நடைபெறும். இச்செயல் முறைப் பரீட்சையில் சித்தியெய்தினால் இவருக்கான தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் உடனடியாக வழங்க முடியும். இது தொடர்பான மேலதிக விபரங்களை யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பார்வையிடலாம் என அவர் தெரிவித்தார். (6-7)

# சர்வதேச இளைஞர் மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பம்

(கொழும்புத்துறை)

சர்வதேச இளைஞர் மகாநாடு கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் இன்று காலை 9.30 மணிக்கு இளைஞர் விவகார மற்றும் தொழில் வாய்ப்பு அமைச்சர் டளஸ் அளக்ப்பெரும தலைமையில் நடைபெறவுள்ளது.

இம்மகாநாட்டுக்காக யாழ். மாவட்டத் தைச் சேர்ந்த 40 இளைஞர்கள் , யுவதிகள் மற்றும் தேசிய சேவை மன்ற உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் வெளிநாடுகளில் இருந்தும் இளைஞர், யுவதிகள் இதில் கலந்து கொள்வதற்காக வருகை தந்துள்ளனர்.

இம் மகாநாட்டுக்கு அமைச்சர்கள், பிரமுகர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-2-51)


நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
அமுதசுரபி அன்னதான சபை
ஆடிப்பூர அன்னதானம்



அம்பிகை அடியார்களே!

இன்று (12.08.2010) வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் ஆடிப்பூர விழாவை முன்னிட்டு அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு வழமை போல் எமது சபையில் அன்னதானம் வழங்குவதற்கு சகல ஏற்பாடுகளும் செய் யப்பட்டுள்ளன என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின் றோம்.

எனவே , அம்பாளை தரிசிக்க வரும் அடியார்கள் தங்கள் தரிசனத்தை முடித்து அன்னதான சபைக்கு வருகை தந்து அன்னதானத்தில் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நிர்வாகம் , அமுதசுரபி அன்னதான சபை.


# குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீடு அமைப்பதற்கான கடனுதவி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் ஆலோசனைக்கு ஏற்ப மத்தியதர மற்றும் குறைந்த வருமானம் பெறுவோர் அரச மற்றும் தனியார் வங்கிகள் ஊடாக குறைந்த வட்டிக்கு வீடமைப்புக் கடன்களை பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார். மத்திய தர மற்றும் குறைந்த வருமானம் பெறுவோர் அரச மற்றும் தனியார் வங்கிகள் ஊடாக வீடமைப்புக் கடன்களை பெற வசதியாக 8-10 வீதத்தில் குறைந்த வட்டிக்கு வீடமைப்புக் கடன்களை பெற முடியும் என அவர் குறிப்பிட்டார். இவ் விடயம் தொடர்பாக கடந்த 9 ஆம் திகதி அலரி மாளிகையில் வீடமைப்பு பொறியியல்துறை மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் எதிர்கால வேலைத் திட்டங்கள் பற்றிய கூட்டத்தில் ஆராயப்பட்டது. இவ் வீடமைப்புக் கடன்களை வழங்குவது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட வங்கிகள் மற்றும் நிதியமைச்சின் அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்திய பின் இக் கடன் திட்டத்தை உடன் அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக தெரிவித்தார். (6-2)

# குவைத்தில் 250 இலங்கையர் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்

(கொழும்பு)

வேலைவாய்ப்பினைப் பெற்று குவைத் நாட்டுக்குப் பயணித்த இலங்கையர்களில் சுமார் 250 பேர் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் தற்போது குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு காரணங்களால் நிர்க்கதியாக்கப்பட்டுள்ள இவர்களை வெகுவிரைவில் இலங்கைக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கோரிக்கைக்கிணங்க குறித்த தூதரகத்தினால் மேற்படி நிர்க்கதியான இலங்கையர்களுக்கான அனைத்து உதவிகளும் செய்யப்பட்டு வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (6)

# 900 மில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் ஈரானிய பிரஜைகள் கைது

(கொழும்பு)

900 மில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப் பொருளை நேற்று இலங்கைக்கு கடத்தி வந்த ஈரானிய பிரஜைகள் இருவர் நேற்று அதிகாலை 3.00 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டார் தலைநகர் டோகாவில் இருந்து புறப்பட்டு வந்திருந்த இவர்கள் அதிநவீன தொழில்நுட்ப பரிசோதனைகள் மூலம் கண்டு பிடிக்க முடியாத வகையில் இந்தப் போதைப் பொருளை மிகவும் பத்திரமான முறையில் கொண்டுவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் விமான நிலையத்தில் கடமையில் இருந்த போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் இவர்கள் மறைத்துக் கொண்டு வந்திருந்த போதைப் பொருளைக் கண்டுபிடித்து இருவரையும் கைது செய்துள்ளார்கள். கைது செய்யப்பட்ட இருவரும் 25 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் ஆவர் எனத் தெரிய வருகிறது. (6-2)

# மரண அறிவித்தல்

## DR.SARAVANAMUTHU SABARATNAM



MBBS (Srilanka), MRCOG(London), FRCOG(UK), A Reputed V.O.G in Srilanka.

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட மகப்பேற்று வைத்திய நிபுணர் சரவணமுத்து சபாரத்தினம் கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை (06.08.2010) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான Dr.இராசையா-செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், ரூபவதியின் அன்புக் கணவரும், குகேந்திரன் (கனடா), நரேந்திரன்(கனடா), துஷியந்தி(லண்டன்), சுரேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும்,காலஞ்சென்றவர்களான Dr.செல்வரட்ணம், செல்லம்மா (கல்முனை) மற்றும் பராசக்தியம்மா (பருத்தித்துறை), சரஸ்வதியம்மா (நல்லூர்), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (B.Sc,CTB பணிப்பாளர், மட்டக்களப்பு) ஆகியோரின் சகோதரரும்,

செல்வி லீலாவதி இராசையாவின் மைத்துனரும், காலஞ்சென்ற பொ.வி.கந்தையா (நொத்தாரிஸ், கல்முனை), தம்பிராசா, லயன். வல்லிபுரம் பரமசிவம், ஜே.பி. (கௌரவ செயலாளர், மூத்த பிரஜைகள் பேரவை, யாழ்.மாவட்டம், ஓய்வூதியர்), காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் இராணி (மட்டக்களப்பு) ஆகியோரின் மைத்துனரும்,

ரஜனி (கனடா), லோஜினி(கனடா), உருத்திரகுமார் (லண்டன்), சுமதி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும்,

அனோஜன், அருண், ஆருஷி, மிதுன், தீபா, மித்ரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.08.2010) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

Res: No. 10 2/7, Metro Flats,
Wellawatte,
Colombo - 06 T.P. 0112 362710

தகவல்:
திருமதி ரூபவதி சபாரத்தினம் (மனைவி)
மற்றும் குடும்பத்தினர்.

(2145)


22.07.2010 முதல்
ஸ்ரீகாந், பிருத்விராஜ், கமாலினிமுகர்ஜி மற்றும் பலர் நடிப்பில்




செல்லர் சினிமா(நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00
(C-588)



**வேலை ஆட்கள் தேவை**

புடவை விற்பனை நிலையத்திற்கு 2 பெண் பிள்ளைகளும் ஒரு ஆணும் தேவை. அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.யாழ்நகரப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புக்கு :-
லைடன் புடவை நிலையம்
410,ஆஸ்பத்திரி வீதி,பஸ் நிலையம் (முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.0212222381
(C-837)


## தென்மராட்சி கிழக்கில் மீள்குடியேற்றப் பதிவு

தென்மராட்சி கிழக்கு கரைக்குறிச்சி கிராம அலுவலர் பிரிவில் மீள் குடியேற்றம் செய்வதற்கான பதிவுகள் இன்று காலை 8 மணி தொடக்கம் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் நடைபெறும். குடும்ப பங்கீட்டு அட்டை, தேசிய அடையாள அட்டை சகிதம் பதிவுகளை மேற்கொள்ளவருமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார் (ச–29)

## கடத்தப்பட்ட இளைஞர் விடுதலையானர்

(வவுனியா)

வவுனியாவில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டு தாக்கப்பட்டபின் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை இடம் பெற்றுள்ளது. வவுனியாவைச் சேர்ந்த கனகரட்ணம் கண்டீபன் என்பவரே கடத்தப்பட்டவராவார்.

குறிப்பிட்ட இளைஞன் முதலில் கப்பம் கேட்டு மிரட்டப்பட்டு பின்னர் வன்னி அடையாள அட்டை கேட்டு தாக்கப்பட்டு அடிகாயங்களுடன் சிங்கள கிராமம் ஒன்றில் வைத்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

தற்போது வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.ச–5)




**மைசூர் சாமுண்டீஸ்வரி ஜோதிட நிலையம்**
இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்

**கங்காதரன் சாஸ்திரி**
**077 0712537**

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

**துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்**

கை ரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் செய்து தரப்படும்

**இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்**

121 A, கஸ்தூரியர் வீதி,
யாழ்ப்பாணம்.
(லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகாமையில்)
(2151)

கைரேகை பார்க்கும் நேரம்:
காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பார்க்கப்படும்


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை ஜெயராஜா



யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஜெயராஜா நேற்று முன்தினம் (10.08.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா-காசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும்,

காலஞ்சென்ற துரைராஜா மற்றும் கணேசலிங்கம் (அவுஸ்திரேலியா), கிருபாநந்தன் (பிரான்ஸ்), ராஜதுரை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும்,

ஜெகதீஸ்வரன் (டென்மார்க்), ஜெயக்குமார் (சுவிஸ்), ஜெயசீலன் (கனடா), காலஞ்சென்ற ஜெயசுதா மற்றும் ஜெயறஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

சிவராணி (டென்மார்க்), தக்ஷாயினி (சுவிஸ்), அனுஷா (கனடா), அம்பிகைபாகன் (I.S.A., தீவகக் கல்வி வலயம்), ஜெயந்தன் (காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை) ஆகியோரின் மாமனாரும்,

நிதுர்ஷா, நிபிவிதா, வர்ஷன், நிகாஷ், நிக்கிஷா ஆகியோரின் பேரனும், நாகராசா, அன்னலட்சுமி, சோதிநாயகி, வளர்மதி, ஜெயமதி, வினோதா ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (12.08.2010) வியாழக்கிழமை நண்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காகத் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சுதா பவனம்" பாடசாலை வீதி,
நெல்லுருபதி பிள்ளையார் கோயிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

தகவல்:
– குடும்பத்தினர்

(2153)

## இறந்ததாக கூறப்பட்ட யாழ்...

கின்றார். அவர் ஜேர்மனி யூடாக சட்டவிரோத மான முறையில் செல்ல முயன்றிருக்கின்றார். ஜேர்மனியில் அகப்பட் டிருக்கின்றார்.

அவருடைய ஆவணங்களில் போலந்து நாட்டைச் சேர்ந்தவர் என்று பொய்யாக பதிவு கள் இடம் பெற்றிருக்கின்றன போல் இருக்கின் றது. அவர் போலந்துக்கு நாடு கடத்தப்பட்டார். அவர் சுமார் 05 வருடங்களுக்கு முன்தான் குடும் பத்தினருடன் இடையிடையே தொலை பேசி யில் உரையாடி வந்திருக்கின்றார். பின் தொலை பேசி உரையாடலும் இடம்பெறவே இல்லை.

இந்நிலையில் அவர்குறித்து எந்தத் தக வல்களும் வருடக் கணக்காகவே கிடைக்கப் பெறாமல் இருந்தமையால் குடும்பத்தினர் அவர் இறந்து விட்டார் என்றே கடந்த மாதம் வரை முடிவெடுத்தனர்.

இந் நிலையில் இலங்கையின் இராஜதந் திரிகளில் ஒருவரும் கட்டாருக்கான இலங் கையின் பிரதித் தூதுவருமான ஐயம்பிள்ளை தர்மகுலசிங்கம் விடுமுறையில் நாட்டுக்கு திரும்பி வந்திருந்த நிலையில் சொந்த இடமான யாழ்ப்பாணத்துக்கும் சென்றிருக்கின்றார்.

தர்மகுலசிங்கம் சிறந்த நிர்வாகி எனவும் மக் கள் தொண்டர் எனவும் பெயரை முத்திரை பதித் தவர். தர்மகுலசிங்கத்தை தயாபரனின் குடும் பத்தினர் எதிர்பாராத விதமாக சந்திக்க நேர்ந்தது.

அப்போது தயாபரனின் குடும்பத்தாரின் துன்பக் கதையை கவனமாக செவிமடுத்த தர்மகுலசிங்கம் என்ன நினைத்தாரோ தெரி யாது போலந்து நாட்டில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அங்குள்ள சக இராஜதந்திரி ஒரு வருடன் உரையாடினார்.

தயாபரன் என்று தமிழ் இளைஞர் ஒருவர் உயிருடன் இருக்கின்றார் என்று சொல்லி போலந்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தி னர் தர்மகுலசிங்கத்துக்கு தகவல் வழங்கினர். அத்துடன் தயாபரனை இரவில் தொடர்பு கொள் ளக் கூடிய கையடக்கத் தொலைபேசி இலக் கம் ஒன்றையும் வழங்கி இருந்தனர்.

இந்த நிலையில் விபரங்களை அறிந்து கொண்ட தயாபரனின் குடும்பத்தினர் மகன் உயிருடன் உள்ளார் என்பதை உறுதிப்படுத்து கின்றமைக்காக அன்று இரவே குறித்த தொலை பேசி இலக்கத்துக்கு அழைப்பு மேற்கொண்டனர். மறுமுனையில் ஒருவரின் குரல் கேட்டது.

தயாபரனின் குடும்பத்தினருடைய காது களை நம்பவே முடியவில்லை. ஆம். அந் நபர் அவர்களுடைய தயாபரன்தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டனர். அவர் போலந் தின் தலைநகர் பகுதியில் நலிந்தவர்களுக் கான இல்லம் ஒன்றில் வாழ்ந்து வருகின்றார்.

## மேர்வின்சில்வா...

அலுவலகத்துக்குள் எந்தவொரு அதிகாரியும் அனு மதிக்கப்படமாட்டார்கள். முன்னாள் பிரதியமைச்சரின் அலுவலகத்திற்குள் யாரையும் அனுமதிக்கக் கூடாது என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் வட்டா ரங்கள் தெரிவித்தன. (ச-5)

## மக்களின் எதிர்ப்பை தணிக்க...

நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் உரை யாற்றிய ஐ.தே.க. பொதுச்செயலாளர் திஸ்ஸ அத் தநாயக்க அரசாங்கத்தை வலியுறுத்தினார்.

அச்சம்பவத்தின் மூலம் மேர்வின் சில்வா சட்டத்தை மீறியுள்ளார். அவர் சட்ட ரீதியாக தண் டிக்கப்பட வேண்டும். வெறுமனே பதவியிலி ருந்து நீக்குவது அந்த நோக்கத்தை நிறைவேற்ற மாட்டாது. இவ்விடயத்தில் அரசாங்கம் உண் மையாக நடந்து கொள்கிறதா என நாம் சந்தே கிக்கிறோம். அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டி ருந்தால் அவரின் பாது காப்பு மற்றும் ஏனைய சலுகைகளும் வாபஸ் பெறப்பட வேண்டும் என திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

அப்பிரதியமைச்சர் ஒழுங்கீனமாக நடந்து கொண்ட வேறு பல சம்பவங்களும் உள்ளன. ஆனால் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வில்லை எனவும் அத்தநாயக்க தெரிவித் தார். (ச-5)

## விடுதலைப்புலிகளின் ஆதர...

உண்மையைக் கண்டறிவதற்காக ஜனாதி பதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங் கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு தமது முதலாவது விசாரணையை நேற்று ஆரம்பித் தது.

முதலாவது விசாரணை அமர்வு முன் னாள் சட்டமா அதிபர் சி.ஆர்.டி.சில்வா தலை மையில் கொழும்பு சர்வதேச கற்கைகளுக் கான லக்ஷ்மன் கதிர்காமர் கேந்திர நிலையம் நேற்றுக் காலை நடைபெற்றது.

2002ஆம் ஆண்டு பெப்ரவரி 21ஆம் திகதிக்கும் 2009ஆம் ஆண்டு மே மாதம்19 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கையில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வு கள் தொடர்பில் இந்த குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் தோல்விக் கான காரணங்கள் மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங்கள் குறித் தும் இந்த சம்பவங்கள் குறித்து யாரேனும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பொறுப் பேற்கின்றார்களா? என்பது தொடர்பிலும் இந்த சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர் களுக்கான மறுசீரமைப்பு முறைகள் குறித் தும் இந்த சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட வர்களுக்கான மறுசீரமைப்பு முறைகள் குறித்தும் சகல இனத்தவர்களினதும் மத்தி யில் தேசிய ஒருமைப்பாட்டையும் நல்லிணக் கத்தையும் ஊக்குவிப்பதற்கான பிரேரணை கள் குறித்தும் இந்த குழுவினால் விசாரணை கள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதில் சமாதான செயலகத்தின் முன் னாள் தலைவர் பேர்னாட் குணதிலக கலந்து கொண்டு முதலாவது சாட்சியாக விளக்க மளித்தார்.

அதில் மேலும் கூறியதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை இன்னமும் உயிருடன் இருப் பதாகத் தெரிவித்து புலம் பெயர் தமிழர்களிடம் சிலர் பணம் திரட்டிவருவதாக அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

கடந்த வருடம் மே மாதம் கொல்லப்பட்ட வேலுப்பிள்ளை பிரபாகரனின் கையொப்பங் களை காண்பித்து சிலர் பணம் திரட்டி வருவ தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் தமிழர்களில் ஒரு சிலர் இலங் கைக்கு எதிரான வகையில் செயற்பட்டு வரு வதாகவும் நாட்டுக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித் துள்ளார். (ச-5)

## இலங்கை யுத்தக் குற்றவிசா...

தலையீடுகளினால் சில அதி காரிகள் ஆணைக் குழுவிலிருந்து விலகியுள்ள தாக சர்வதேச மன் னிப்புச் சபையை ஆதாரம் காட்டி இந்த அதி காரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்க காங்கிரஸைச் சேர்ந்த 57 உறுப்பினர்கள் இந்தக் கடிதத்தில் கையொப்ப மிட்டுள்ளனர்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இரண்டு தரப்பினாலும் குற்றச் செயல்கள் மேற்கொள் ளப்பட்டுள்ளமைக்கான ஆதாரங்கள் காணப் படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சுயாதீன மான சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் இலங்கையில் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் குறித்த காங் கிரஸ் சபை உறுப்பினர்கள் ஜனாதிபதி பராக் ஓபாமாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எவ்வாறெனினும் யுத்தக் குற்றச்சாட்டுக் களை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## மகஸீன் சிறை...

கிடையிலும் நீண்ட கால மாக பகை நிலவிய தாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரி வித்துள்ளார்.

இரு தரப்பினருக்கும் இடையிலான மோதலை தடுக்க கைதியொருவர் குத்தப் பட்டு காயங்களுடன் கொழும்பு தேசிய வைத் திய சாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிறைச்சாலையில் பாது காப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேற்படி சம்பவம் குறித்து பொரளை பொலிஸார் விசார ணை நடத்தி வருவதாகவும் சிறைச்சாலை கள் ஆணையாளர் கூறியுள்ளார். (ச-5)


## சிங்கள வகுப்பு

சிங்களம் இலகுவாகப் பேச, எழுத சிறந்த முறையில் கற்பிக்கப்படும்

வகுப்பு நேரம் :-

ஞாயிறு 8-9, 9-10 மணி வகுப்புக்கான பதிவுகள் பூரணமாகிவிட்டது.

10-11, 11-12 மணி வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன.

இடம் :- கஸ்தூரியார் வீதி
கிருபா லேணர்ஸ் அருகாமையில் உள்ள
ஒழுங்கையில் கடைசி வீடு.
0772283940 (2152)


## யுத்தத்தால் கொல்லப்...

சேரும் என ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளு மன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது குறிப்பிட்டார்.

இலங்கையில் இதுவரை காலமும் பல்வேறு இடங்களிலும் நடத்தப்பட்ட குண்டு வெடிப்புகளுக்கும் மேற்கொள்ளப் பட்ட தாக்கு தல்களுக்கும் ஒவ்வொரு தோட்டா சத்தத்திற் கும் கே.பியின் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ள தாகவும் அவர் சொன்னார்.

ஆகவே இவ்வாறு பாரிய அழிவுகளை ஏற்படுத்தக் காரணமாக இருந்து கொடிய நபரைக் கைது செய்து ஒருவருடம் பூர்த்தி யாகியுள்ள நிலை யில் அவர்மீது எது விதக் குற்றச்சாட் டும் முன்வைக்கப் படாது. குற்றப் பத் திரிகைதாக்கல்செய் யப்படாமல், நீதி மன்றத்தின் முன் நிறுத்தப்படா மல் சுகபோகமா கவே வாழ வாய்ப்பளிக் கப்பட்டுள்ளதாகவும் அவர் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது கூறினார். (ச-5)


## வளாகம் கடந்த பரதநாட்டியப் பட்டப்படிப்பு விண்ணப்பங்கள் கோரல்

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள 'கலைக் காவிரி' நுண்கலைக் கல்லூரியுடன் இணைந்து எமது கல்லூரியினால் நடத்தப் படும் வளாகம் கடந்த பரதநாட்டியப் பட்டப்படிப் புகளுக்கான புதிய ஆண்டுக்கான விண் ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*பட்டப்படிப்புக்கள்*

* முதுநுண்கலை மாணி (M.F.A) - 02 வருடம்
* இளநுண்கலைமாணி (B.F.A) - 03 வருடம்
* பெருஞ்சான்றிதழ் கற்கை (Dlploma in Dance) - 01 வருடம்

தரச் சிறப்பு மிக்க மேற்படி கற்கை நெறிகள் தொடர்பான மேலதிக விபரங்களை பெற கல்லூரியுடன் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 31.08.2010

இவ்வாண்டில் எமது கல்லூரி மூலம் முதுநுண்கலைமாணிப் பரீட்சைக்குத் தோற் றிய 14 மாணவர்களும் முதலாம் தரத்தில் சித்தி பெற்றுள்ளார்கள் என்பதையும் தெரி வித்துக்கொள்கின்றோம்.

கலைக்கோட்டம்
இல. 122 டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி :- 021 222 9419 (C-840)

அதிபர்,
கலைத்தூது அழகியல் கல்லூரி



## இலங்கை மின்சாரசபை - யாழ்.பிரதேச அலுவலகம்
## மின்தடைபற்றிய அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் பராமரிப்பு வேலைகளை செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்தாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பாக மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

| திகதி | இடங்கள் |
|---|---|
| 12.08.2010 | சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி பன்னாலை, சிறுவிளான். |
| 13.08.2010 | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய். |
| 14.08.2010 | உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப்பிரதேசம். திருநெல்வேலிப்பிரதேசம், பட்டினப்பகுதி நீங்கலாக யாழ்.மாநகரசபைப்பகுதி. |
| 15.08.2010 | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய் மற்றும் புன்னாலைக் கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் முழுவதும். |
| 16.08.2010 | சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி பன்னாலை, சிறுவிளான். |
| 17.08.2010 | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய். |
| 18.08.2010 | சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன் துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி. |
| 19.08.2010 | சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன் துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி. |

இதனால் மின் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சாரசபை"

மின் பொறியியலாளர்
யாழ் பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னாகம். (C-844)





## வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயம்
## அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம்



ஆடிப்பூர மஹா சங்காபிசேக விஞ்ஞாபனம் வியாழக்கிழமை 12.08.2010

காலை 9.30 மணிக்கு சங்காபிசேகம் (1009) காலை 11.30 மணிக்கு பூரகர்ம (ருதுசாந்தி) வைபவம், மாலை 7.00 மணிக்கு வசந்தமண்டப பூசை, திருவூஞ்சல் உற்சவம் தொடர்ந்து அம்மை, அப்பன் வீதியுலா வருதல்

விசேட மங்கள வாத்தியம்

என்.இராமநாதன் குழுவினர் (வட்டுக்கோட்டை), என்.ஆர்.கே.இரத்தினகுமார் குழுவினர் (இணுவில்)

'அன்னை அப்பன் அருள் மகத்தானது'

ஆலய பரிபாலனசபையும் தொண்டர் சபையும்

(C-845)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.